உ

பரப்ரஹ்மணேநம:.

வ ச் ச ண ந் தி மா லை

என்னும்

வெண்பாப்பாட்டியல்

மூலமும் உரையும்,

வரையறுத்தபாட்டியல்

மூ ல மு ம் உ ரை யு ம்.

இவை

S. அனவரதவிநாயகம்பிள்ளை, M. A., L. T.,

அவர்களால் பார்வையிடப்பெற்று,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

1908.

விலை அணா 2.

முகவுரை.

பாட்டியல், எழுத்துச் சொற்பொருள் யாப்பு அணி யென்னும் ஐவகை யிலக்கணங்களு ளொன்ருக வைத்துக் கணிக்கப்படுவ தில்லையாயினும், அவற்றைப் பூர்த்தி செய்ய வரும் ஒரு சிறந்த அங்கமாகும். அவற்றிற்கு ஒழிபியல் போன்று அவற்றிற் கூறப்படாத விஷயங்கள் பலவற்றைக் கூறுதற்காகப் பாட்டியல் தோன்றிற்று. நூலினைக் கற்போர்க்கு இவ்வுண்மை நன்கு விளங்கிக் கிடக்கும்.

பாட்டியன் மரபை வெண்பாவாற் கூறலின் வெண் பாப்பாட்டியலெனவும், வச்சணந்தி தேவரென்னும் முனிவர் செய்வித்தலின் வச்சணந்திமாலை யெனவும், இந் நூல் பெயர் பெற்றது. இந் நூல் செய்தார் குணவீர பண்டிதர். இந் நூற் பாயிர வுரையில் 'இஃது எந் நூல் வழித்தோவெனின், இந்திரகாளி யென்னும் பாட்டியன் மரபின் வழித்து' என்று கூறப்படுதலின் வெண்பாப்பாட்டியலுக்கு முதனூல் இந்திரகாளி யென்பது பெறப்படும். உரையுள் அதனினின்றும் மேற்கோள்களும் காணப்படுகின்றன. சிலப்பதிகார வுரையில் அடியார்க்கு நல்லார் பிரஸ்தாபிக்கும் இந்திரகாளியம் யாமளேந்திரராற் செய்யப்பட்ட இசைத்தமிழ் நூலாகலின் இது அதனின் வேருதல் வேண்டும்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் பதிப்பித்திருக்கும் பன்னிரு பாட்டியலும், சிதம்பரப்பாட்டியலும், பாட்டியற்கொத்

தென்னும் புத்தகத்தில் காணப்படும் நவநீதப்பாட்டியலும், பாட்டியன் மரபு கூறும் வேறு நூல்கள். இலக்கண விளக்கத்துள்ளும் செய்யுளியலுக்குப் பின் பாட்டியலென்னும் இயலுள் பாட்டியன் மரபு கூறப்பட்டது.

வெண்பாப்பாட்டியல் இக் காலத்துச் செய்யப்பட்டதென அறுதியிட்டுரைத்ததற்குப் போதிய ஆதாரமில்லை. இந் நூல் திரிபுவனதேவன் என்னும் அரசன் காலத்ததெனவும், சங்கத்தாராற் கேட்கப்பட்டதெனவும் உரையிற் கூறப்பட்டுளது. சங்கமென்றது ஜயினர் சங்கங்களு ளொன்றுபோலும்!

வெண்பாப்பாட்டியலோடு பதிப்பித்திருக்கும் வரையறுத்தபாட்டியல் சீர் முதலிய மங்கலச் சொற்களுக்குப் பொருந்திய பெயர்களை யுணர்த்த வந்தது. இதனை யியற்றினார் சம்பந்தமாமுனிவர் என்றும், சில பிரதிகளில் இந் நூற் பெயர் சம்பந்தப்பாட்டியலென வுள்ளதென்றும் பாட்டியற் கோத்து முகவுரை யுடையார் கூறினர். நூலினுள்ளேயே முதற் கலித்துறையுள் "சம்பந்த மாமுனி பாதமலர் நேர் கொண் டிறைஞ்சி" என்று ஆசிரியர் கூறுதலின், வெண்பாப் பாட்டியலை வச்சணந்தி முனிவர் செய்வித்ததுபோலச் சம்பந்தமாமுனிவர் வரையறுத்த பாட்டியலைச் செய்வித்தவராவரென்று துணிய இடமுண்டு.

உ

கடவுள்துணை.

வச்சணந்திமாலை

என்னும்

வெண்பாப்பாட்டியல்

மூலமும் உரையும்.

முதலாவது

முதன்மொழியியல்.

பாயிரம்.

மதிகொண்ட முக்குடைக்கீழ் வாமன் மலர்த்தாள்
துதிகொண்டு நாளுந் தொழுது—நுதிகொண்ட
பல்கதிர்வே லுண்கண்ணாய் பாட்டியலைக் கட்டுரைப்பன்
தொல்லுலகின் மீதே தொகுத்து.

என்பது சூத்திரம்.

யாதானுமொரு நூலுரைக்கு மிடத்துப் பாயிரமுரைத் துரைக்க வென்பது மரபு. பாயிரமென்பது முகவுரை.

அப் பாயிரம், பொதுவுஞ் சிறப்புமென இருவகைப்படும்.

அவற்றுட் பொதுப்பாயிரம் நான்குவகைப்படும் :

"ஈவோன் றன்மை யீத லியற்கை
கொள்வோன் றன்மை கோடன் மரபென
வீரிரண் டென்ப பொதுவின் றொகையே."—என்றாராகலின்.

இவற்றுள், ஈவோன்றன்மை - ஆசிரியனிலக்கணம் ; ஈதலியற்கை - அவன் வித்தை கொடுக்குமுறைமை ; கொள்வோன்றன்மை- மாணுக்க னிலக்கணம் ; கோடன்மரபு - அவன் வித்தை கொள்ளு முறைமை.

ஆசிரியர் இருதிறத்தர்; கற்கப்படுவோரும், கற்கப்படாதோரு மென. அவருட் கற்கப்படுமாசிரியர் நான்குதிறத்தர் :

"மலைநிலம் பூவே துலாக்கோ லென்றின்ன
ருலைவி லுணர்வுடை யோர்."

கற்கப்படாவாசிரியர் நான்கு திறத்தர் :

"கழற்பெய் குடமே மடற்பனை முடத்தெங்கு
குண்டிகைப் பருத் தியோ டிவையனை யாரே."

மாணுக்கரும் இருதிறத்தர் ; கற்பிக்கப்படுவோரும் கற்பிக்கப் படாதோருமென. அவருள் கற்பிக்கப்படு மாணுக்கர் அறுவகையர் :

"தன்மக னாசான் மகனே மன்மகன்
பொருணனி கொடுப்போன் வழிபடு வோனே
யுரைகோ ளாளனோ டிவரென மொழிப."

இவர் குணம் :

"அன்னங்கிளியே நன்னிற நெய்யரி
யானை யானே றென்றிவை போலக்
கூறிக்கொள்வர் குணமாண் டோரே."

கற்பிக்கப்படா மாணுக்கர் எண்வகையர் :

"மடிமானி பொச்சாப்பன் காமுகன் கள்வ
னடுநோய் பிணியாள ஞறுச் சினத்தன்
றடுமாறு நெஞ்சத் தவனுள்ளிட் டெண்மர்
நெடுநூலைக் கற்கலா தார்."

ஆசிரியன் ஈயும் முறைமை :

"ஈத லியல்பே யியல்புறக் கிளப்பின்
பொழிப்பே யகல மெச்ச நுட்பமெனப்
பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன்
புகழ்ந்த மதியிற் றிகழ்ந்த நாளிற்
றெளிந்த வறிவினன் றெய்வம் வாழ்த்திக்
கொள்வோ னுணரும் வகையறிந் தவன்வயிற்
கொள்வரக் கொடுத்தன் மரபென மொழிப."

கொள்வோன் முறைமை.

"கொள்வோன் றன்மை கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடன் முனியான்
முன்னும் பின்னு மிரவினும் பகலினு
மகலா னாகி யன்பொடு புணர்ந்தாங்
காசற வுணர்ந்தோன் வாவென வந்தாங்
கிருவென விருந்து சொல்லெனச் சொல்லி
நெஞ்சு களனாகச் செவிவா யாகக்
கேட்டவை கேட்டவை வலவ னாகிக்
கொடுத்தன கோட லவனது பண்பே."

இவை எல்லா நூன்முகத்து முரைக்கப்படுதலிற் பொதுப் பாயிரமாம்.

இனிச் சிறப்புப்பாயிரம் எண்வகைப்படும் :

"ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனே டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே."—என்றாராகலின்.

அன்றியும், இவ்வெட்டுடன், காலம், களன், காரணமென்னும் மூன்றையுங் கூட்டிப் பதினொன் றென்பாரு முளார்.

"காலங் களனே காரண மென்றிம்
மூவகை யேற்றி மொழிநரு முளரே."—என்றாராகலின்.

அவற்றுள், ஆக்கியோன் பெயரென்பது நூல்செய்த ஆசிரியன் பெயர். இந் நூல் யாரால் செய்யப்பட்டதோவெனின்,

கற்றவர் புகழுங் களந்தையென் பெரும்பதிக்
குற்றமில் வாய்மைக் குணவீர பண்டிதன்

என்னும் ஆசிரியனாற் செய்யப்பட்டது.

வழியே யென்பது இன்னதின் வழித்தென்றல். இஃது, எந் நூல் வழித்தோ வெனின் இந்திரகாளி யென்னும் பாட்டியன் மரபின் வழித்து.

எல்லையென்பது நடக்குமெல்லை. இஃது, எவ்வெல்லையி னடக்குமோ வெனின், தமிழ் வழங்கு மிடமெங்கு மென்க.

நூற்பெயரென்பது நூலினது பெயரிது வென்றல். இந் நூல் என்ன பெயர்த்தோ வெனின்,

எய்திய மணிப்பூ ணிலங்குமணி நெடுந்தேர்
வேந்தர் சூடும் விரைகெழு மலர்த்தாள்
விளங்கெழின் மாடத்துக் களந்தையெம் பெருமான்
வளர்ந்த ..ர்த்தி வச்சணந்தி தேவ

னென்னும் மாமுனி செய்த விதனால்
வச்சணந்திமாலை யென்னும் பெயர்த்து.

யாப்பென்பது, தொகுத்தும், விரித்தும், தொகை விரிப்படுத்தும், மொழிபெயர்த்து மாக்கல். அவற்றுள், இஃதெவ்வாறாக்கப்பட்டதோ.வெனின் தொகுத்தாக்கப்பட்டது.

நுதலிய பொருளென்பது, எடுத்துக்கொண்ட பொருளின்னதென்றல். இஃது எடுத்துக்கொண்ட பொருள் யாதோ வெனின், பாட்டியன் மரபு.

கேட்போரென்பது நூலாய்வார். இப் பாட்டிய லாய்ந்தோர் யாரோ வெனின்,

சிங்கா வண்புகழ் செறிபொழிற் றிருமலைப்
பங்கய மலர்த்தாட் பஃறித ரென்னு

முனிவ ராய்ந்தாரென் றுணர்க.

பயனென்பது இன்ன பயக்குமென்றல். இந் நூல் ஏது என்ன பயக்குமோ வெனின், அறம், பொருள், இன்பம் வீடென்னு நான்கினையும் பயக்கும்.

காலமென்பது இன்னார்காலத் திந் நூல் செய்த தென்றல். இந் நூல் யார்காலத்துச் செய்ததோவெனின்,

குருத்தவா மணிமுடிக் கொற்றவர் கோமான்
திருத்தகு மணிமுடித் திரிபுவன தேவன்

என்னும் அரசன் காலத்திற் செய்த தென்றுணர்க.

களனென்பது நூல் கேட்பித்த தின்னா ரவைக் களத்தென்றல். இந் நூல் கேட்பித்த தியா ரவைக் களத்தெனில், கடவுண் முதலிய நற்சங்கத்தா ரவைக்களத் தென்றுணர்க.

காரணமென்பது நூல் செய்தற்குக் காரணமின்னதென்றல். இந்நூல் யாது காரணமாகச் செய்யப்பட்டதோவெனின், பரந்தபாட்டியன் மரபுகளிற் கரந்துகிடந்த பொருளையெல்லாம் ஒரு கோவைப் படுத்தல் காரணமென்றுணர்க.

சிறப்புப்பாயிர மென்பது தானுணர்த்திய வெழுந்த அந் நூற்கு இன்றியமையாதது. இந் நூற்குச் சிறப்புப் பாயிரம் யாதோவெனின்,

"பண்பார் கவிஞர் வியந்தேத்தப் பாட்டியலாம்
வெண்பாவந் தாதி விளம்பினான்—நண்பாருங்
கோடாத கீர்த்திக் குணவீர பண்டிதனும்
பீடார் களந்தைப் பிரான்"—என்றுணர்க.

இந் நூலுள், இவ் வாதியியல் என்ன பெயர்த்தோ வெனின், முதன்மொழி யிலக்கண முணர்த்தினமையின், முதன்மொழி யிய லென்னும் பெயர்த்து. அற்றேல், எடுத்த சூத்திரந் தொடுத்த பொருள் யாதோவெனின், தெய்வவணக்கமும், அதிகாரமு முணர்த்துத லுதலிற்று.

இதன் பொருள். மதிகொண்ட ... தொழுது எனத் தெய்வ வணக்கங் கூறப்பட்டது. பாட்டியலைக் கட்டுரைப்பன்...தொகுத்து என அதிகாரங் கூறப்பட்டது. நுதிகொண்ட பல்கதிர்வேலுண் கண்ணாய் என்பது மகடூஉ முன்னிலை.

இந் நூலுட் சில செய்யுளில் மகடூஉ முன்னிலை வரும். (க)

பாயிர முற்றிற்று.

நூல்.

தொகுத்துரைத்த மங்கலஞ் சொல்லெழுத்துத் தானம்
வகுத்தபா லுண்டி வருணம்—பகுத்தநா
ட்பாக் கதிகணமென் றீரைந்தின் றன்மையினைச்
செப்புவதா முன்மொழியின் சீர்.

என்பது சூத்திரம் என்றுதலிற்றேவெனின் உரியவோத்தினுள் ஒன்றும் பொருள் இவையெனப் பெயரும், முறையும், தொகையு முணர்த்துதனுதலிற்று.

இ - ள். மங்கல முதலாகக் கணமீறாகக் கிடந்த பத்தினையுஞ் சொல்வது முதன்மொழியின் றன்மை என்றவாறு.

இப்பத்தினையுந் தத்தமிலக்கண முறைக்குஞ் சூத்திரத்துள்ளே காட்டுதும். (உ)

க. மங்கலப்பொருத்தம்.

சீரெழுத்துப் பொன்பூ திருமணிநீர் திங்கள்சொற்
கார்பரிதி யானை கடலுலகந்—தேர்மலைமா
கங்கை நிலம்பிறவுங் காண்டகைய முன்மொழிக்கு
மங்களமாஞ் சொல்லின் வகை.

எ - ன். நிறுத்தமுறையே முற்கூறிய பத்தனுள் அடுத்த மங்கல மாராய்தனுதலிற்று.

இ-ள். சீர்முதலாக நிலமீறாக வெண்ணப்பட்ட பத்தொன்பதும் பிறவும் முதன்மொழியிடத்தே நிற்றற்குரிய மங்கலச் சொல்லினது கூறுபாடாம். எ - று. (ங)

பரியாயநாமம் வரினு மிழுக்காது.

உ. சொற்பொருத்தம்.

வசையுளி சேர்தல் வனப்பின்றாய் நிற்றல்
தொகையார் பொருள்பலவாத் தோன்ற—றகையில்
பொருளின்மை யீறு திரிதலே போல்வ
தருமுதற்சீர்ச் சொற்காகுந் தப்பு.

எ - ன். முன்மொழிக் காகாத சொல் இன்னதென் றியம்புத லுதலிற்று.

இ - ள். முதலெடுத்துக்கொண்ட மூவசைச்சீரியவாகிய சொற் கள் மங்கலத்தவாயினும் வசையுளி சேர்ந்தனவும், சிறப்பில் சொல் லும், பலபொருட் கேற்றசொல்லும், பொருளில் சொல்லும், தோன் றல் திரிதல் கெடுதலென்னும் விகாரவிறுதிச் சொல்லும், முன் வைக்கப்படா. எ - று.

எனவே, அல்லனயாவையுஞ் சொல்லற்பாலன வென்றுணர்க.

ரு. எழுத்துப்பொருத்தம்.

தப்பாத மூன்றைந்தே ழொன்பான் றவறில்வெ
ன்றொப்பா முதற்சீர்க் குரைசெய்வர்—செப்புங்கால்
ரண்டாத நான்காறெட் டாகா தவிர்கென்று
கொண்டா ரெழுத்தின் குறி.

எ - ன். முன்மொழி எழுத்திலக்கண முணர்த்துதலுதலிற்று.

இ - ள். ஒற்றுட்பட மூன்றும், ஐந்தும், எழும், ஒன்பதுமா கிய வெழுத்தான் முதன்மொழிக்கு வருவது நன்று. நான்கும், ஆறும் எட்டுமாகிய வெழுத்தான் முதன் மொழிக்கு வருவது தீது. எ - று.

இரண்டெழுத்தாராபாது விட்ட தெற்றுக்கெனின், "முன்மொ ழியாகலான் மூவசைச்சீ ரல்லன, நன்மைசா றெய்வ நவிலாமை'

என்னுமிதனுன் மறுக்கப்பட்டது. ஒற்றுப்பட வெண்பதெறூற் போந்ததெனின் ஒற்றொழிந் தொன்பதெழுத்தான் வருவதொரு மூவசைச் சீரின்மையினென்க. ஒற்றைப்படவருவன வியனிலை, இரட்டைப்பட வருவன சமனிலை. (௪)

௪. தானப்பொருத்தம்.

குறிலைந்துந் தந்நெடில்கொண் டிஉஐ ஒளசேர்ந்
தறிபால ஞதியா வைந்து—மிறைவன்பேர்
முன்னெழுத்துப் பாலனில்வைத் தெண்ணிமூப் பேமரணம்
என்னுமிவை தீதென்றே யெண்.

எ - ன். ஐவகைத்தானமும் மெய்வகையாக விரித்தணுதலிற்று.

இ - ள். குற்றெழுத் தைந்தோடுந் தமக்கொத்த நெடிலைச்சேர்த்து, இ உ க்கள் நின்றதானத்து முறையே ஐகார ஒளகாரங்களைச் சேர்த்தால், உயிரும், உயிர்மெய்யுமென்று சொல்லப்பட்ட தொகையெல்லாம் ஐந்துகூறாயடங்கும். இவற்றைப் பாட்டுடைத் தலைமகன் இயற்பெயரின் முதலெழுத்தின் கூற்றைத் தொடங்கிப் பாலன், குமரன், இராசன், மூப்பு, மரணமென வருவித்தால், அவற்றுள் மூப்பும், மரணமுமாகா. அல்லன முதற்சீரின் முதலெழுத்தாய் வருவன நன்கு. எ - று.

ரு. பாற்பொருத்தம்.

என்னுங் குறிலா னியைந்த நெடிலெல்லாம்
பெண்ணாகு மொற்றாய்தம் பேடாகும்—பெண்ணினொ
டாண்புணர்ச்சிக் கவ்வவ் வெழுத்தே மயங்கினுமா
மாண்பில்பே டென்றார் மதித்து.

எ - ன். பாலிலக்கண முணர்த்துதனுதலிற்று.

இ - ள். குற்றெழுத்தெல்லாம் ஆண்பாலெழுத்தாம். நெட்டெழுத்தெல்லாம் பெண்பாலெழுத்தாம். ஒற்றெழுத்தும், ஆய்தவெழு

த்தும் அலியெழுத்தாம். ஆண்பாலைப் புகழுமிடத்து ஆணெழுத் துச் சிறப்புடைத்து. பெண்பாலைப் புகழுமிடத்துப் பெண்ணெ ழுத்துச் சிறப்புடைத்து. மயங்கிவந்தவெனினும் வரையப்படா. அலியெழுத்து முன்னிற்குந் தகைமையவல்ல. எ - று.

முதன்மொழி யென்பததிகாரத்தாற் கொள்க. (எ)

சு. உணாப்பொருத்தம்.

மதித்த கசதநப மவ்வோடு வவ்வு
முதித்தமைந்த நாற்குற் றுயிருந்—துதித்தமுதென்
றுதி மொழிக்குந் தசாங்கத் தயலுக்குந்
தீதிலவே யென்றார் தெரிந்து.

எ - ன். உண்டி யிரண்டுமுணர்த்திய வெழுத்தா லவற்றுட் கொண்ட வமுதெழுத்துக் கூறுத னுதலிற்று.

இ - ள். க ச த ந ப ம வவ்வென்னும் ஒற்றுக்களேழும், அ இ உ எ என்னும் நான்கு குற்றுயிரும் அமுதவெழுத்தாம். அவை மொ ழிமுதலும், தசாங்கத்தயலும் வந்து வழங்கு மரபினவாம். எ-று. (அ)

தெரிந்த யரலமேற் சேர்ந்தவா வோவும்
புரிந்தவற் றொற்றாய்தப் புள்ளி—விரிந்த
வளவொடுகொன் மாத்திரைபு மாமென் றறிந்தோ
ருளவென்றார் நஞ்சென் றொழி.

எ - ன். எஞ்சிநின்ற நஞ்செழுத்து நவிலுதனுதலிற்று.

இ - ள். கூறிய ய ர லக்கள் மேலேறிய ஆகார ஓகாரமும் ய ர ல வென்னுமொற்றும், ஆய்தப்புள்ளியும், ஒற்று உயிரென்னும் அளபெ டையிரண்டும், மகரக்குறுக்கமும், ஆய்தக்குறுக்கமும் ஆகிய பதி னைங்கும் நச்செழுத்தாம். அவை ஆதிமொழிக்குந் தசாங்கத் தயலுக்கு மாகா. எ - று.

முதற்சீராகிய மங்கலச்சொல்லின்கண் நஞ்செழுத்து வந்தன வாலோவெனின்,"நஞ்சு மமுதமா மங்கலம் புகினே" என்பவாகலின், மூவகைச்சீருள் மங்கலச்சொல்லொழியக்கொள்க. நஞ்சினு மமுதினு நாட்டப்படாவாகி யெஞ்சிநின்ற உயிரும், உயிர்மெய்யும், மெய்யும் எப்பாற்பட்டவெனின்,

"அமுதெழுத் தென்ற வா தியுயிர் நான்கொடும்
புணர்ந்தமெய்யை யுணர்ந்தமு தென்ப."

"மெய்யா மமுதின் மேவிய வுயிரும்
பொய்தீர் புலவர் பொருந்தின வென்ப."

"நஞ்சா மொற்றொடு நடந்த வுயிர்களும்
வஞ்சமில் புலவர் மறுத்தில ரென்ப"

"இருவகை யுண்டியென் றெடுத்தன வல்ல
தாமே நிற்பினுந் தோஷமில வென்ப." என்பன இந்திரகாளி.

எ. வருணப்பொருத்தம்.

ஒழியா வுயிரனைத்து மொற்றுமுத லாறு
மழியா மறையோர்க்கா மென்பர்—மொழிபு
மடைவேயோ ராறு மரசர்க்கா மென்பர்
படையாத சாதிகளின் பண்பு.

எ - ன். வருணநான்கனுள் மறையோர்சாதியும், அரசர்சாதியு மறைதனுதலிற்று.

இ-ள். உயிர் பன்னிரண்டும் ஒற்றுமுதலாறும்,பயிலுந்தன்மைப் பார்ப்பனச்சாதி. அல்லாமெய்யி னடைவேயாறு, மல்லார்புயத்து மன்னர்சாதி. எ - று. (௧0)

பின்பார் வணிகர்க்காம் பாங்கி லவறனக்கண்
மன்பாவுஞ் சூத்திரர்க்கா மற்றையனை—நன்பா
லரனரிசேய் மால்கதிர்கூற் றுய்மழைபொன் மெய்க்குப்
பிரமன் படைப்புயிர்க்குப் பேசு.

எ - ன். அல்லாவருண மிரண்டு முணர்த்திச் சொல்லாப் படைப்புஞ் சொல்லுத லுதலிற்று.

இ - ள். ல வ ற ன என்னுநான்கு மெய்யும் வணிகர்வருண மாம். ழ ள வென்னும் மிரண்டுஞ் சூத்திரவருணமாம். அரன், அரி, செவ்வாய், புதன், இரவி, மதி, இயமன், வருணன், வியாழம் என்னு மொன்பது புத்தேளிரும், முறையே இரண்டிரண்டாகப் பதினெட்டு மெய்யும் படைத்தார். பன்னீருயிரும் பிரமன் படைத்தான். எ-று.

இச் சூத்திரத்துட் கதிரெனப் பொதுப்படக்கூறியது, கதிரி ரண்டுஞ் சோடர்கு. படைப்பை அதிகாரத்தாற் றழீஇக்கொள்ளா தெடுத்தோதித் தொடுத்தமை படைப்பு வேண்டாமை முதனூ றழு விற்றுகலானும், பிறர்நூன் முடிந்தது தானுடன்படுதலானுமென்க. அன்றியும் இவ்வெழுத்துகட்குத் தெய்வம் அவ்வவர்களெனக் கொள் ளப்பட்டதெனினுமமையும். (கக)

அ. நாட்டோருத்தம்.

போசு முயிரடைவே நான்காரல் பின்னைந்து
மாசிலாப் பூராட மற்றொருமூன்—றாசிலாப்
பேருத்தி ராடமா மென்று பெரிதுணர்ந்தோர்
பாரித்தார் நாளின் பரிசு.

எ - ன். எறிய முதலெழுத்திற்கு நாளிசைப்புழி யாறீருயிர்க்கும் நாளறிவித்த லுதலிற்று.

இ - ள். அ ஆ இ ஈ என்னுநான்குயிருங் கார்த்திகை. உ ஊ எ ஏ ஐ என்னுமைந்தும் பூராடம்; ஒ ஓ ஔ வென்னுமூன்றும் உத் திராடமாம். எ - று. (கஉ)

பரிசுடைய கவ்வரியி னொன்கிரண்டு மூன்றுந்
தெரிவுடைய மூன்றடைவே செப்பிற்—பிரிவுடைய
வோணமே யாதிரையே யொண்புனர்பூ சம்பூசம்
பேணி யுரைத்தா பிறித்து.

எ - ன். கவ்வருக்கநாளுரைத்த னுதலிற்று.

இ - ள். க கா கி கீ என்னும் நான்குந் திருவோணம். கு கூ என்னு மிரண்டுந் திருவாதிரை. கெ கே கை என்னுமூன்றும் புநர்பூசம். கொ கோ கௌ என்னுமூன்றும் பூசமாம். எ - று. (கங)

பிறந்த சகரத்து நான்கைந்து பின்மூன்
றறிந்த கலமுதன்மூன் றாகுஞ்—செறிந்த
ஞகரத் தொருமூன்று நன்குணர்ந்தோ ராய்ந்த
புகர்தீ ரவிட்டமாம் போற்று.

எ - ன். சகர ஞகர வருக்கங்களுக்கு நாளுணர்த்துத னுதலிற்று.

இ-ள். ச சா சி சீ என்னு நான்கும் இரேவதி. சு சூ செ சே சை என்னுமைந்தும் அச்சுவினி. சொ சோ சௌ என்னுமூன்றும் பரணி. ஞ ஞா ஞெ என்னுமூன்றும் அவிட்டமாம். எ - று. (கச)

போற்றுந் தகரமிரண் டேழ்மூன்றும் பொய்தீர்ந்தோர்
சாற்றுவர் சோதி முறஞ்சதயம்—வேற்றனுடங்
கேட்டைபூ ரட்டாதி கேணகரத் தோராறும்
வாட்டமிலா மும்மூன்றும் வந்து.

எ - ன் தகர நகர வருக்கங்களுக்கு நாளுரைத்த னுதலிற்று.

இ - ள். த தா என்னு மிரண்டும் சோதி. தி தீ து தூ தெ தே தை என்னுமேழும் விசாகம். தொ தோ தௌ என்னு மூன்றுஞ் சதயம். ந நா நி நீ நு நூ என்னுமாறும் அனுடம். நெ நே நை என்னு மூன்றும் கேட்டை. நொ நோ நௌ என்னு மூன்றும் பூரட்டாதியாம். எ - று.

வந்த பகரத்து நான்கிரண்டா றுத்திரந்தொட்
டந்தமிலா மூன்றாகு மவ்வடைவே—வந்ததற்பி
னாறுமக மூன்றுடன்மூன் றாயிலியம் பூரமா
மாறின் மகரத்தின் மாட்டு.

எ - ன். பகரவருக்கத்திற்கும், மகரவருக்கத்திற்கும் நாளுரைத்தனுதலிற்று.

இ - ள். ப பா பி பீ என்னுநான்கும் உத்திரம். பு பூ என்னுமிரண்டும் அத்தம். பெ பே பை பொ போ பௌ என்னு மாறும் சித்திரை. ம மா மி மீ மு மூ என்னு மாறும் மகம். மெ மே மை என்னு மூன்றும் ஆயிலியம். மொ மோ மௌ வென்னு மூன்றும் பூரமாம். எ - று. (கசு)

மாட்டும் யகரத்துள் யாவுத் திரட்டாதி
யீட்டியயூ காரயோ காரங்கள்—காட்டிய
மூலம் வகரத் தொருநான்கு ரோகணிமான்
றேலாத நான்கெனவே சொல்.

எ - ன். யகர வகர வருக்கங்களுக்கு நாளுரைத்தனுதலிற்று.

இ-ள். யா ஒன்றும் உத்திரட்டாதி. யூ யோ என்னு மிரண்டும் மூலம். வ வா வி வீ என்னும் நான்கும் உரோகணி. வெ வே வை வௌ என்னு நான்கு மிருகசிரமாம். எ - று. (கஎ)

சொல்லியநான் மூவொன்ப தாகத் துலிர்தொன்று
புல்லியமூன் றைந்தேழ் பொருந்தாவா—மல்லனவற்
றட்டம ராசி வயினு சியமிவையும்
விட்டொழித்த னன்றெனவே வேண்டு.

எ - ன். பாட்டுடைத் தலைவன்பெயர் முதலெழுத்தினுட்கும், மங்கலமொழி முதலெழுத்தினுட்கும் பொருந்துமா றுணர்த்துத லுதலிற்று.

இ - ள். சொல்லியநா ளிருபத்தேழையும், ஒன்பதொன்பதாக மூன்று கூறுக்கிப் பாட்டுடைத்தலைமக னியற்பெயரின் முதலெழுத்தினைத் தொடங்கிக் கூறுகளையெண்ண ஒன்று மூன்று ஐந்து எழ்வரிற் பொருந்தா. அல்லாத நாட்களுட் பாட்டுடைத் தலைவன் பெயர் முதலெழுத்தி னிராசிதொடங்கி எட்டாமிராசி நாட்களும் பொருந்தா. வயினாசியமாகிய எண்பத்தெட்டாங்கால் நின்ற நாளும் பொருந்தா. எ - று.

புல்லியவென்று மிகுத்துச்சொல்லியவதனல், மூன்றுமொன்ப தின் மூன்றுமைந்து மேழும் பொருந்துமெனக் கொள்க.

"மூன்று மொன்பதின் மூன்றைந் தேழும்
பொருந்து மென்று புகலுவர் புலவர்." என்பது இந்திரகாளி.

கூ. கதிப்பொருத்தம்.

வேண்டுங் குறில்வன்மை யிரெழுத்தால் விண்ணோர்க்கா
மாண்ட நெடின்முதனுன் கந்தமொழித்—தீண்டிய
மென்மையா மக்கட் கிவையிரண்டு மெய்க்கதிக்கு
நன்மையா முன்மொழிக்கு நாட்டு.

எ - ன். ஒதியநாற்கதி யுணர்த்திய வெழுந்தவற்று கியிரண்டு மறிவித்தனுலிற்று.

இ - ள். அ இ உ எ என்னும் நான்கு குற்றுயிரும், க ச ட த ப வென்னு மைந்தொற்றுந் தெய்வகதியாம். ஆ ஈ ஊ ஏ யென்னு நான்கு நெட்டுயிரும், ங ஞ ண ந ம வென்னு மைந்தொற்றும் மக்கட்கதியாம். இவ்விரண்டு கதியெழுத்து முன்மொழிக்கு நன்மை யுடையவாம். எ - று. (சக)

நாட்டிய ஒ ஓ யரலழநல் வன்மைக்
கீட்டிய வந்தமிவை விலங்காங்—காட்டா
தொழிந்த நரகர்க்கென் றோதினா ரின்ன
வெழுத்தாகா வாதி யிடை.

எ - ன். ஒழிந்த கதியிரண்டு முணர்த்துத லுதலிற்று.

இ - ள். ஒ ஓ வென்னும் உயிரிரண்டும், ய ர ல ழ வென்னு மிடையொற்று நான்கும்,வன்மையிறுதியென்று சொன்ன றகாரமும் விலங்குகதியாம். காட்டாதொழிந்த ஐ ஔ வென்னு முயிரிரண்டும், வகர ளகர னகர மென்னு மூன்றொற்றும் நரகர்கதியாம். இக் கதியிரண்டும் முதன் மொழியிடத்து வரப்பெறா வெனக்கொள்க. எ-று.

௰. கணப்பொருத்தம்.

ஆதி யிடையிறுதி முற்றுநே ராநிரையென்
றோதுவர்நீர் தீமாக மொண்சுவர்க்கந்—தீதிலோர்
சொற்றார் மதிபரிதி காநிலமா நீர்மதியு
முற்றுநி யாமுன் மொழிக்கு.

எ - ன். எண்வகைக் கணமு முணர்த்துத லுதலிற்று.

இ - ள். ஆதிநேர், இடைநேர், இறுதிநேர், முற்றுநேர், ஆதிநிரை, இடைநிரை, இறுதிநிரை, முற்றுநிறை என்று கூறப்பட்ட கூவிளங்கனி, புளிமாங்கனி, கருவிளங்காய், தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய், தேமாங்கனி, கருவிளங்கனி யென்னு மெட்டும் முறையானே நீர், தீ, வானம், துறக்கம், மதி, பரிதி, காற்று, நிலம் என்னும் பெயரினை யுடைத்தாம். இவற்றுள், நீரும், திங்களும், துறக்கமும், நிலமும் முதன்மொழிக்காகும், ஒழிந்தனவாகா. எ-று.

துறக்கத்தை இயமானனென்பாருமுளர். (உக)

முன்மொழி யாகலான் மூவகைச்சீ ரல்லன
நன்மைசா றெய்வ நவிலாமை—முன்மொழிக்
கிட்டிய தொன்மை யிலக்கணங்க ளிவ்வகையே
காட்டு மகலக் கவிக்கு.

எ - ன். கணந்தருசிறப்பின் காரணமுணர்த்தி மணந்த பத்தி லக்கணம் வருமிட முணர்த்துதனுதலிற்று.

இ - ள். வெண்பா உரிச்சீரானும், வஞ்சி உரிச்சீரானும் வந்த எண் பெருங் கணங்கட்குந் தெய்வமடுத்தமையிற் காட்டுமுன்மொழி யிடத்து, மூவகைச்சீர் நாட்டி யேனையவற்றை விலக்கிய தொல்லோ ரிலக்கணங்கள் மங்கல முதலாக, இவ்வகையே அம் மூவகைச் சீரின் கட் காட்டா நின்றன அகலக்கவிக்கு. எ - று. (௨௨)

வெண்பா.

திருமங்கை நின்றகலா டெவ்வுநோய் நீங்கும்
தருமங்க ணீங்கலாச் சார்வா—ரிருநிலத்து
மன்னருள்ளார் தாழுந்தாள் வச்சணந்தி மாமுனிவ
னின்னருளா னேக்கு மிடம். (௨௩)

முதன் மொழியியல் முற்றிற்று.

இரண்டாவது
செய்யுளியல்.

கவிகமகன் வாதியே வாக்கியெனக் காசில்
புவியின்மே னல்வர் புலவர்—கவிகடா
மாசு மதுரமே சித்திரம்வித் தாரமெனப்
பேசுவார் நால்வர்க்கும் பேர்.

என்பது சூத்திரம்.

இவ்விய லென்ன பெயர்த்தோவெனின், செய்யு ளிலக்கண முணர்த்தினமையிற் செய்யுளியலென்னும் பெயர்த்து. இச் சூத்திர நுதலிய பொருள் யாதோவெனின், பத்துவகை யிலக்கணமும் வித்தார கவிக்கு வேண்டினர் அவ் வித்தார கவிகளையும் ஒழிந்துநின்ற கவிகளையு முணர்த்திய வேண்டிப் புலவாது பெயரும், முறையும், தொகையுங் கூறி, அவருள் முதற்புலவராகிய கவிகளுடைய பெயரு முணர்த்துதனுதலிற்று.

இ-ள். கவி, கமகன், வாதி, வாக்கி யெனப் புலவர் நால்வர். அவருள் ஆசுகவி,மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி எனக் கவிகள் நால்வர். எ-று.

ஆசுகவி.

பேரெழுத்திற் சொல்லிற் பொருளிற் பெருங்கவியிற்
சீரலங்கா ரத்திற் றெரிந்தொருவ—னேர்கொடுத்த
வுள்ளுரைக் கப்போ துரைப்பதனை யாசென்று
ரெள்ளாத நூலோ ரெடுத்து.

எ-ன். நிறுத்த முறையானே ஆசுகவி பேசுத னுதலிற்று.

இ - ள். இவ்வெழுத்தாலே பாடுக, இச்சொல்லாலே பாடுக, இப்பொருளாலே பாடுக. இவ்யாப்பாலே பாடுக, இவ்வலங்காரத்தாலே பாடுக என்றொருவன் சொன்னவுள்ளுரைக்கு அவனெதிரே பாடப்படுவது ஆசுகவியாம். எ - று.

ஆசுகவிபாடும் புலவனும் ஆசுகவியாம்.

இவற்றி லிரண்டுமூன்று மகப்படப்பாடுதல் சிறப்புடைத்து. (௨)

மதுரகவி.

எடுத்த பொருளினோ டோசை யினிதா
யடுத்தவை செஞ்சொல்லா யணியுந்—தொடுத்த
தொடையும் விளங்க வவைதுதிப்பச் சொல்லி
னிடமுடைய மாமதுர யாப்பு.

எ - ன். மதுரகவியிது வென னுதலிற்று.

இ - ள். ஓசையும், பொருளுமினிதாய், முழுதுஞ் செஞ்சொல்லாய், அலங்காரமுந் தொடையுந் தெற்றென்று கேட்டார் துதிக்கும்படி பாடுவது மதுரகவியாம். எ - று.

இக் கவி பாடுவோனும் மதுரகவியாம்.

சிறுபான்மையிற் றிசைச்சொல்லும், திரிசொல்லும், வடசொல்லும் மருவிவரினு மிழுக்காது.

வரலாறு. பூமகளு நல்வாழ்வு பெற்றாள் புரைதீர்ந்த
நாமகளும் பல்கலையு நண்ணினாள்—டோமகல்சீர்
வையம் புகழ்களந்தை வச்சணந்தி மாமுனிவன்
செய்ய பதகமலஞ் சேர்ந்து. (௩)

சித்திரகவி.

யாப்புடைய மாலைமாற் றுதியா வேனையவும்
வாய்ப்புடைய சொல்லின் வகுத்தமைத்து—நீப்பிலா
வண்ணமுந் தொ[illegible]னூன் மரபு வழுவாமற்
பன்னுவது சித்திரத்தின் பா.

எ - ன். சித்திரகவி யித்தன்மைத்தென னுதலிற்று.

இ - ள். மாலைமாற்று, சக்கரம், சுழிகுளம், ஏகபாதம், எழுகூற்றிருக்கை, காதைகரப்பு, கரந்துறைப்பாட்டு, தூசங்கொளல், வாவனூற்றி, கூடசதுக்கம், கோமூத்திரி, ஒரெழுத்துப்பா, வல்லினப்பாட்டு, மெல்லினப்பாட்டு, இடையினப்பாட்டு, சித்திரக்கா, விசித்திரக்கா, வித்தாரக்கா, விகற்பநடை, வினாவுத்தரம், சருப்பதோபத்திரம், எழுத்துவருத்தனை, நாகபந்தம், முரசபந்தம், நிரோட்டகம், சித்து, ஒருபொருட்பாட்டு, பலபொருட்பாட்டு, மாத்திரைப்பெருக்கம், மாத்திரைச்சுருக்கம், எழுத்துப்பெருக்கம், எழுத்துச்சுருக்கம், இன்னவை பிறவுமாகிய பல விகற்பத்தாற் செய்யப்பட்டு ஓசைகெடாமல், எழுத்துக்குற்றம், சொற்குற்றம். பொருட்குற்றம், யாப்புக்குற்றம், அலங்காரக் குற்றம் என்னுங் குற்றங்கள் படாமல், பாடப்படுங் கவி சித்திரகவியாம். எ - று.

இக் கவி பாடுவோனுஞ் சித்திரகவியாம். இவையெல்லாம் யாப்பணி யதிகாரங்களிற் கண்டுகொள்க. (சு)

வித்தாரகவி.

பாங்கார் தொடர்நிலைப்பாப் பல்பாதஞ் சேர்தனிப்பா
வீங்ககலப் பாக்க ளிரண்டாகு—மாங்குத்
தொடர்நிலைப்பா வின்விகற்பஞ் சூழ்வளையாய் சொல்லிற்
கடையிலவே யென்றுரைத்தார் கண்டு.

எ - ன். அகலக்கவி புகலுத னுதலிற்று.

இ - ள். பல செய்யுட்கள் கூடிவந்த தொடர்நிலைச் செய்யுளும், அடிபலவாய் நடக்குந் தனிப்பாச்செய்யுளு மென்னும் இருதிறமும் அகலக்கவியாம். அவற்றுட் டொடர்நிலைச் செய்யுளை விகற்பிக்குமிடத்து எற்றபொருளெடுத்துப் பாடுவோ ரளவல்லது இன்ன அளவென் றுரைப்பதரிது. எ - று.

அகலக்கவி பாடுவோனும் அகலக்கவியாம். (௯)

பிள்ளைக்கவி.

கண்டுரைக்கிற் பிள்ளைக் கவிதெய்வங் காக்கவெனக்
கொண்டுரைக்குந் தேவர் கொலையகற்றி—யொண்டொடியாய்
சுற்றத் தளவா வகுப்பொடு தொல்விருத்த
முற்றுவித்த னூலின்முறை.

எ - ன். பலவிகற்பங்களிற் சிலவெடுத்துரைப்பான் வேண்டி, அவற்றுட் பிள்ளைக்கவிக்கு இலக்கண முணர்த்துத னுதலிற்று.

இ - ள். பிள்ளைக்கவி பாடுமிடத்து வேண்டுங் கடவுளைச் சுட்டிப் பாட்டுடைத் தலைவனை அவன் சுற்றத் தொகையோடு தேவர் கொலையகற்றிக் காக்கவென, வகுப்பாலும், ஆசிரியவிருத்தத்தாலும் பாடுக. எ - று.

கண்டுரைக்கின் என்று மிகுத்துச் சொல்லியவதனால், காப்புக் கவிகளை மூன்று ஐந்து எழு ஒன்பது பதினொன்றாகத் தொடுத்துக் காப்புமாலை யென்று பாடுகையு முளதென்றுணர்க. (௬)

முறைதரு மூன்றாதி மூவேழீ றாந்திங்க
ளறைகநிலம் பத்துமாண் டைந்தே—ழிறைவளையார்க்
கந்தஞ் சிறுபறையே யாதியா மூன்றொழித்துத்
தந்தநில மோரேழுஞ் சாற்று.

எ - ன். இதுவுமது.

இ - ள். பிள்ளைப் பிரபந்தம் மூன்றுமாதமுதல் இருபத்தோராம் மாதம்வரை ஒற்றித்த மாதமாகிய பத்து மாதங்களினுங் கேட்பிக்கப்படும். அன்றியும், ஐந்தாமாண்டினும் எழாமாண்டினும் இக்கவி கேட்பிக்கினு மிழுக்காது. பெண்பிள்ளைக் கவி பாடுமிடத்துச்

சிறு பறை கொட்டலும், சிற்றில் சிதைத்தலும், சிறுதே ருருட்டலு மாகிய மூன்று நிலமு மொழித்து; ஒழிந்த வேழுநிலமும் பாடப்படும். எ - று.

இவ்வேழுடன், கழங்கு, அம்மனை, ஊசல் என்னு மூன்றையுங் கூட்டிப் பத்தாகப் பாடுவாருமுளர். (எ)

சாற்றரிய காப்புத்தால் செங்கீரை சப்பாணி
மாற்றறிய முத்தமே வாரானை—போற்றரிய
வம்புலியே யாய்ந்த சிறுபறையே சிற்றிலே
பம்புசிறு தேரோடும் பத்து.

எ-ன். பிள்ளைக் கவிக்கேற்ற பத்துநிலமுமுரைத்த னுதலிற்று.

இ - ள். காப்பும், தாலும், செங்கீரையும், சப்பாணியும், முத்தமும், வாரானையும், அம்புலியும், சிறுபறை முழக்கலும், சிற்றில்சிதைத்தலும், சிறுதேருருட்டலும் என முறையானே பாடுக. எ - று.

நிலங்கள் பத்தும், தம்மிலொக்கக்கொண்டு பாடுமிடத்து ஒற்றிக்கப்பாடுவது சிறப்புடைத்து. இரட்டித்துப் பாடினு மோனை பெயர்த்துப் பாடுக. (அ)

பல்சந்தமாலை, அந்தாதி.

பத்தாதி நூறந்தம் பல்சந்த மாலையா
மொத்தாய வெண்பா வொருநூறு—வொத்தசி
ரந்தாதி யாகுங் கலித்துறையு மவ்வகையே
வந்தா லதன்பே ரவை.

எ - ள். பல்சந்த மாலைகளும், அந்தாதியு முணர்த்துதனுதலிற்று.

இ - ள். பத்துமுதலாக நூறீறாக நின்ற விகற்பத்தது பல்சந்தமாலை விகற்பமாம். நேரிசை வெண்பா நூறு அந்தாதியாய் வந்தால்

வெஃபாவந்தாதி யென்றும், கட்டளைக்கலித்துறை நூறு அந்தாதி யாய் வந்தாற் கலித்துறையந்தாதி யென்றும் பெயர்பெறும். எ - று.

பல்சந்தமாலை வகுப்பும் ஆசிரியமுமாய் அந்தாதித்துவரும். (கூ)

கலம்பகம்.

வைக்கும் புயந்தவம்வண் டம்மனை பாண்மதங்கு
கைக்கிளைசித் தூசல் களிமடக்கூர்—மிக்கமறங்
காலந் தழையிரங்கல் சம்பிரதங் கார்தூது
கோலுங் கலம்பகத்தின் கூறு.

எ - ன். கலம்பக விலக்கணங் கூறுத னுதலிற்று.

இ - ள். புயம், தவம், வண்டு, அம்மனை, பாண், மதங்கு, கைக்கிளை, சித்து, ஊசல், களி, மடக்கு, குடி, மறம், காலம், தழை, இரங்கல், சம்பிரதம், மேகவிடுதூது என்னு மிப்பதினெட்டுங் கலம் பகத்தி னுறுப்புப் பொருளாம். எ - று.

மிக்க மறமென்று சிறப்பித்த வதனால்,இப்பதினெட்டும் கலம் பகத்துக்கு நிலைபெற்ற வுறுப்பு, ஒழிந்தன இன்னவகையான பொரு ளால் வருபவென்னு நிலைபேறுடைய வல்லவென்று கொள்க.

ஊரென்றது குடிமை.

இரங்கலென்றது காமமிக்க கழிபடர் கிளவி. (கo)

கூறு மொருபோகு வெண்பா கலித்துறைகண்
மாறின் முதலுறுப்பா மன்விருத்தம்—வேறகவல்
வஞ்சித் துறைவிருத்தம் வான்றுறைவெண் பாமருட்பா
வெஞ்சாக் கலியினங்கொண் டீட்டு.

எ - ன். கலம்பகப்பா வேறுபா டுணர்த்துத னுதலிற்று.

இ - ள். முதலொருபோகு வந்து அதன் பின்னொரு வெண்பா வந்து, அதன் பின்னொரு கலித்துறை வந்தால் அவை முதலுறுப்

பாம். அதன்பின் ஆசிரியவிருத்தம்,ஆசிரியப்பா,வஞ்சித்துறை,வஞ்சி விருத்தம், வெண்டுறை, வெண்பா, மருட்பா, கலித்தாழிசை, கலித் துறை, கலிவிருத்தமென்று சொல்லப்படும் பாக்க ளீரையந்தபடி கொண்டியற்றுக. பிறபாக்கள் வரினு மிழுக்காது. எ - று. (கக)

ஈசர்க்கு நூறிழிபைந் தையர்க் கிலரசர்க்
காசற்ற தொண்ணூ றமைச்சருக்கா—மேசா
வெழுபானைம் பான்வணிகர்க் கேனையோர்க் காறைந்
திழிபிற் கலம்பகப்பாட் டீண்டு.

எ - ன். கலம்பகத்திற் கேற்ற சுருக்க மியம்புதனுதலிற்று.

இ - ள். தேவர்க்கு நூறும், முனிவர்க்குத் தொண்ணூற்றைந் தும், அரசர்க்குத் தொண்ணூறும், அமைச்சருக் கெழுபதும், வணி கர்க் கைம்பதும், எனையோர்க்கு முப்பதுமாகப் பாடுவதே யிழிபு. எ - று.

ஆசற்றவென்று சிறப்பித்தவதனால், குறுநில மன்னரை அரச ரைப்போலவும், முனிவரைப் புத்தேளிரைப்போலவும் பாடினு மிழுக் காது.

கலம்பகமும் அந்தாதியாகவே பாடவேண்டுமென்றறிக. (கஉ)

ஒலியந்தாதி, மும்மணிக்கோவை.

ஈண்டிய முப்பதா யிரெண் கலைவண்ணா
மூண்டதொலி யந்தாதி முப்பதா—மாண்டகவன்
முன்முறையே வெண்பா கலித்துறைய வந்தாதி
மும்மணிக்கோ வைக்கு முதல்.

எ - ன். ஒலியந்தாதியும், மும்மணிக்கோவையு முணர்த்துத லுதலிற்று.

இ-ள். ஓரடிக்குப் பதினாறு கலைதொடுத்த பல்சந்த வகுப்புக்கள் அந்தாதியாக முப்பது கூடியது ஒலியந்தாதியாம். நேரிசை ஆசிரியப் பாவும், நேரிசை வெண்பாவும், கட்டளைக் கலித்துறையும், முறையே அந்தாதியாக முப்பது கூடியது மும்மணிக்கோவையாம். எ-று.

ஈண்டிய வென்று மிகுத்துச் சொல்லியவதனால், ஒலியந்தாதி சிறுபான்மை நிலைமண்டில ஆசிரியப்பாப் பெற்றுவருவனவும் உளவெனக் கொள்க. ஒலியந்தாதியை ஒலியலந்தாதி யென்பாருமுளர்.

ஊர்நேரிசைவெண்பா, ஊரின்னிசைவெண்பா.

முதல்வனூ ரின்பேரான் மொழிவன வெண்பா
வதனைத்தொண் ணூறெழுபா னைம்பான்—மதர்விழியா
யின்னிசைவெண் பாவிற்கு மொக்கு மியற்பெய
ரன்னவற்றூற் கட்டுரைத்தா ராய்ந்து.

எ-ன். ஊர்நேரிசை வெண்பாவும், ஊரின்னிசை வெண்பாவும், அவற்றின் றொகையு முரைத்த னுதலிற்று.

இ-ள். பாட்டுடைத்தலைவன் ஊர்ப்பெயரெடுத்து நேரிசை வெண்பாவாற் சிறப்பித்துத் தொண்ணூறு, எழுபது, ஐம்பது என்னுந் தொகையாற் பாடுவது ஊர்நேரிசை வெண்பா வென்றும், இவ்வாறு இன்னிசை வெண்பாவாற் பாடுவது ஊரின்னிசை வெண்பா வென்றும் பெயர் பெறும். எ-று. (௧௮)

கோவை, கைக்கிளை.

தூய்ந்த கலித்துறைதா னூனூ றகப்பொருண்மேல்
வாய்ந்தநற் கோவையா மற்றுரைப்பி—னேய்ந்த
வொருதலைக் காம முரைப்பவையை யைந்தாய்
வருவிருத்தங் கைக்கிளையா மன்.

எ - ன். கோவையுங் கைக்கிளையுங் கூறுத னுதலிற்று.

இ - ள். கட்டளைக்கலித்துறை நானூறு அகப்பொருண்மேல் வருவன கோவை யென்பதாம். ஒருதலைக்காமப் பொருள் பெற்று விருத்தம் இருபத்தைந்தாய் வருவன கைக்கிளையாம். எ - று. (கரு)

மும்மணிமாலை, நான்மணிமாலை.

மன்னிய வெண்பா கலித்துறை மன்னர்பா
முன்னியமுப் பான்மும் மணிமாலை—மன்விருத்த
நாட்டிய நாற்பது நான்மணி மாலையா
மீட்டியவந் தாதியா யேய்ந்து.

எ - ன். மும்மணிமாலையும், நான்மணிமாலையு முணர்த்துத னுதலிற்று.

இ - ள். வெண்பாவும், கலித்துறையும், ஆசிரியமும், அந்தாதியாய் முப்பது செய்யுள் வருமாயின் மும்மணிமாலை யென்றும், மேற்கூறிய பாக்களுடன் ஆசிரியவிருத்தஞ் சேர்ந்து அந்தாதியாய் நாற்பது செய்யுள் வருமாயின் நான்மணிமாலை யென்றும் பெயர் பெறும். எ - று. (கசா)

இருபாவிருபஃது, இரட்டைமணிமாலை, இணைமணிமாலை.

ஏய்ந்த விருபா விருபதுவெண் பாவகவ
லாய்ந்த விரட்டை மணியிருபா—னேய்ந்தசிர்
வெண்பா கலித்துறையா மேவிய நான்கானூ
றென்பா விணைமணியா மோர்.

எ - ன். இருபாவிருபஃதும், இரட்டைமணிமாலையும், இணைமணிமாலையு மியம்புத னுதலிற்று.

இ-ள். வெண்பாவும் ஆசிரியப்பாவும், முறையே அந்தாதியாய் வந்து இருபது செய்யுளான் முடிவது இருபா விருபஃதென்றும்; வெண்பாவும், கலித்துறையும், முறையே அந்தாதியாய் வந்து இருபது செய்யுளான் முடிவது வெண்பாக் கலித்துறை யிரட்டைமணி மாலை யென்றும்; வெண்பாவும் ஆசிரியப்பாவும் முறையே அந்தாதியாய் நூறு செய்யுளான் முடிவது வெண்பாவகவ லிணைமணிமாலை யென்றும்; வெண்பாவும் கலித்துறையும் கூடி முன்போன் முடிவது வெண்பாக் கலித்துறை யிணைமணிமாலை யென்றும் பெயர் பெறும். எ - று. (கஎ)

ஒருபா வொருபஃது, பன்மணிமாலை.

ஓர்ந்தகவல் வெண்பா கலித்துறையென் றொன்றிற்
லார்ந்தவொரு பாலொருப தம்மானை—கூர்ந்தொருபோ
கூச லொழித்தாற் கலம்பகப்பா வொண்மாலை
பேசிய பன்மணியாம் பின்பு.

எ - ன். ஒருபா வொருபஃதும், பன்மணிமாலையு முணர்த்துத னுதலிற்று.

இ - ள். ஆசிரியப்பாவேனும், வெண்பாவேனும், கலித்துறையேனும், அந்தாதியாய்ப் பத்துச்செய்யுள் வருவன வொருபா வொருபஃதாம். கலம்பக வுறுப்புக்களில் அம்மானையும், ஒருபோகும், ஊசலும் ஒழித்து மற்றைய வுறுப்புக்களாற் பாடுவது பன்மணிமாலை யென்று பெயர் பெறும். எ - று. (கஅ)

தசாங்கம்.

புல்லு மலையா றுநாடூர் புனைதார்மா
கொல்லுங் களிறு கொடிமுரசம்—வல்லகோ
லென்றிவை நஞ்செழுத்தோ டேலா வகையுரைப்ப
நின்று தசாங்கமென வோர்.

எ - ன். சின்னப்பூ வுணர்த்துவான் றொடங்கி, அதற்கு நில மாகிய தசாங்க முணர்த்துத னுதலிற்று.

இ - ள். மலை, ஆறு, நாடு, ஊர், மாலை, பரி, கரி, கொடி, முரசம், செங்கோல் ஆகிய பத்தும் தசாங்கமென்று சொல்லப்படும். இவை பாடுமிடத்து நஞ்செழுத்துத் தசாங்கத்துக்கு முன்னும் பின்னும் வாராமற் பாடுக. எ - று. (கக)

சின்னப்பூ, தசாங்கப்பத்து.

நேருந் தசாங்கத்தை நேரிசை வெண்பாவா
லீரைம் பதுதொண்ணூ றீண்டெழுபா—னேரைம்பான்
றேர்ந்துரைக்கிற் சின்னப்பூ விரைந்தாற் செப்பினர்
நேர்ந்தத சாங்க நிலை.

எ - ன். சின்னப்பூவும், தசாங்கநிலையு முரைத்த னுதலிற்று.

இ - ள். தசாங்கம் பத்தையும் பொருளாகக்கொண்டு, நேரிசை வெண்பா நூறுனும், தொண்ணூறுனும், எழுபதானும், ஐம்பதானும் பாடுவது சின்னப் பூவாம். முப்பது பாடினு மிழுக்காது. நிலைமைகள் தம்மி லொப்பக்கொண்டு பாடப்படுந் தசாங்கம் பத்தினையும் பத்து வெண்பாவாற் பாடுவது தசாங்கப்பத்தென்று பெயர் பெறும். எ - று. (உ0)

நிலைபார் குடைசெங்கோ லூர்நாடு நீள்வேல்
கொலையார் களிறு குதிரை—சிலைவா
ளிவற்றின்மேன் மன்விருத்த மீரைந்தாய் வந்தா
லவற்றின்பேர் நாட்ட லறிவு.

எ - ன். விருத்த விகற்ப முரைத்த னுதலிற்று.

இ-ள். குடை, செங்கோல், ஊர், நாடு, வேல், கரி, பரி, வில், வாள் இவ் வொன்பதனையும் பொருளாகக்கொண்டு, ஒன்றன்மேற் பத்தா

சிரிய விருத்தம் புணர்த்தால், அப் பொருளோடு பெயர்கொடுத்து, குடை விருத்தம், செங்கோல்விருத்தம், ஊர்விருத்தம், நாட்டுவிருத்தம், வேல்விருத்தம், யானைவிருத்தம், குதிரைவிருத்தம்,வில் விருத்தம், வாள்விருத்தம் என்று வழங்கப்படும். எ - று. (உக)

ஊர்வெண்பா, அலங்காரபஞ்சகம்.

அறிந்திடி லூர்வெண்பா வையிரண்டாம் வெள்ளை
செறிந்த கலித்துறைசிர் மன்பா—வறைந்த
கலங்காத மன்விருத்தங் காண்டகைய வண்ண
மலங்கார பஞ்சகமென் றார்.

எ - ன். ஊர்வெண்பாவும், அலங்காரபஞ்சகமு முரைத்த னுதலிற்று.

இ - ள். ஊரடுத்து நேரிசை வெண்பா பத்து வந்தால் ஊர் வெண்பாவெனவும்; நேரிசை வெண்பாவும், கலித்துறையும், ஆசிரியப்பாவும், ஆசிரியவிருத்தமும், வகுப்புமாகிய ஐந்துமுறையே வந்தால் அலங்கார பஞ்சக மெனவும் பெயர் பெறும். எ - று. (உஉ)

ஊசல், நாழிகைவெண்பா.

ஆங்கவிருத் தத்தா லறைந்தகலித் தாழிசையா
லோங்கியசுற் றத்தளவா யூசலாம்—போங்கடிகை
தேவர்க்குங் காவலர்க்குந் தேர்ந்துரைக்க வெண்பாவை
மேவியநா லெட்டாக வேய்ந்து.

எ - ன். ஊசலும், நாழிகைவெண்பாவும் உணர்த்துத னுதலிற்று.

இ - ள். ஆசிரிய விருத்தத்தாலாதல், கலித்தாழிசையாலாதல் சுற்றத்தளவாத் தொகையாகப்பாடுவது ஊசலென்பதாம். நாழிகை

யளவைக் குறித்துத் தேவருக்கும், அரசருக்கும், நேரிசைவெண்பாவால் முப்பத்திரண்டாகப் பாடுவது நாழிகைவெண்பா வெனப்படும். எ - று.

ஊசன் முதற்கவியில் வண்ணமுங்கொள்க. வண்ணமென்பது வகுப்பு. (உ௩)

அட்டமங்கலம், நவமணிமாலை, தசப்பிராதுற்பவம்.

வேய்ந்த விருத்தங்க ளெட்டட்ட மங்கலமாம்
வாய்ந்தன வொன்பான் மணிமாலை—யாய்ந்தங்
கிசைத்திடுவர் மால்பிறப்பா லீரைந்து வாழ்த்துத்
தசப்பிரா துற்பவமாந் தந்து.

எ - ன். அட்டமங்கலமும், நவமணிமாலையும், தசப்பிரா துற்பவமு முணர்த்துத லுதலிற்று.

இ - ள். ஆசிரியவிருத்தத்தாற் கவிதோறும் தேவர்கள் காக்க வென எட்டுக் கவியாகப்பாடுவது அட்டமங்கலமாம். மேற்கூறியவாறே ஒன்பது கவியாகப் பாடுவது நவமணிமாலையாம். மால் பிறவிப்பேதப் பதின்மருங் காக்கவெனத் தனித்தனி ஆசிரிய விருத்தத்தாற் பத்துக்கவி பாடுவது தசப்பிராதுற்பவமாம். எ - று.

வாழ்த்தென்பதனை யெங்கு மொட்டிக்கொள்க. (உ௪)

நயனப்பத்து, பயோதரப்பத்து.

தந்துரைத்த மன்விருத்தஞ் சார்ந்த கலித்துறைதா
னந்தமுறுங் கண்முலைமே லையிரண்டாய்—வந்தா
னயன பயோதரப்பத் தாமென்று நன்னூற்
பயனுணர்ந்தார் முன்பு பகர்.

எ - ன். நயனப்பத்தும் பயோதரப்பத்து முணர்த்துத லுதலிற்று.

இ - ள். ஆசிரியவிருத்தத்தானுதல், கலித்துறையினுனுதல் நயனத்தையும், பயோதரத்தையும் பொருளாகக்கொண்டு தனித்தனி பப்பத்துக் கவி பாடுவது நயனப்பத்தென்றும், பயோதரப்பத்தென்றும் பெயர் பெறும். எ - று. (உரு)

பெண்களபருவம்.

பகருங்கா லேந்தேழ் பதினொன்று பன்மூன்
றகலாத பத்தொன்பா னைபைங்— திகலாத
முப்பத்தொன் றீரிருபான் பேதைமுத லோர்க்குச்
செப்புவராண் டெல்லைத் திறம்.

எ - ன். உலாவுணர்த்துவான் றொடங்கிப் பேதை முதலாப் புறத்திலக்கணமாகிய எழு நிலனு மிவையென வுதலிற்று.

இ - ள். ஐந்துமுத லேழளவும் பேதை. எட்டுமுதற் பதினொன்றளவும் பெதும்பை. பன்னிரண்டுமுதற் பதின்மூன்றளவு மங்கை. பதினான்கு முதற் பத்தொன்பதளவு மடந்தை. இருபது முதல் இருபத்தைந்தளவும் அரிவை. இருபத்தாறு முதல் முப்பத்தொன்றளவும் தெரிவை. முப்பத்திரண்டுமுதல் நாற்பதளவும் பேரிளம்பெண். எ - று.

பருவமொன்றுக்கு வருடம் ௩, ௪, ௨, ௬, ௬, ௬, ௯. (உ௬)

உலா, குழமகன்.

திறந்தெரிந்த பேதை முதலெழுவர் செய்கை
மறந்தயர வந்தான் மறுகென்—றறைந்தகலி
வெண்பா வுலாவாங் குழமகன்மேன் மேவிலவ்
வெண்பாக் குழமகனு மூற்று.

எ - ன். உலாவும் குழமகனு மாமாறுணர்த்துத லுதலிற்று.

இ - ள். பேதை முதலானோர் காதல்கூர வீதியிடைப்போந்தான் பாட்டுடைத் தலைவனென்று கலிவெண்பாவாற் பாடுவது உலாப்புறமாம். மடந்தையர் கையிற் கண்ட குழமகனைப் புகழ்ந்து மேற்கூறிய பாவாற் பாடுவது குழமகனும். எ-று.

திறந்தெரிந்த வென்று மிகுத்துச் சொல்லியவதனால் உலாப்புறத்துமுன் குழமகனைப்பாடினு மிழுக்காது. அது தலைவன் நாடும், தாரும், பெயரு முள்ளிட்ட வளந்தோன்றப் பாடுவது. (உஎ)

வளமடல்.

உற்ற வறம்பொருள்வீ டெள்ளி யுயர்த்தின்பம்
பொற்றொடி காதற் பொருட்டாகப்—பெற்றி
யுரைத்தகலி வெண்பா மடலிறைவ னெண்பேர்
நிரைத்த வெதுகை நிறுத்து.

எ - ன். வளமடல் கூறுத னுதலிற்று.

இ - ள். அறம் பொருள் வீட்டை யெள்ளி இன்பத்தையே வலியுறுத்திப் பாட்டுடைத் தலைவ னியற்பெயருக்குத் தக்க முழுது மொரே யெதுகையாகத் தனிச்சொலின்றிக் கலிவெண்பாவாய் மடலூரும் பெற்றியிற்றென்று பாடுவது வளமடலாம். எ - று.

வளமடலென்பது உரையிற்கோடல். (உஅ)

அங்கமாலை, பாதாதிகேசம், கேசாதிபாதம்.

நிறுத்த வெளிவிருத்த நீடுறுப்பில் வந்தாற்
குறித்தங்க மாலையாக் கொள்க—வுறுப்பமைந்த
பாதாதி கேசமுங் கேசாதி பாதமுமா
வோதுங் கலிவெண்பா வொன்று.

எ - ன். அங்கமாலையும், பாதாதிகேசமும், கேசாதிபாதமும் உணர்த்துத னுதலிற்று.

இ - ள். உறுப்புக்களை வெளிவிருத்தத்தாற் புகழ்ந்து கோவையாகப் பாடுவது அங்கமாலையாம். அவ்வங்கங்களைக் கலிவெண்பாவாற் புகழ்ந்து பாதாதிகேசமாகப் பாடுவது பாதாதி கேசமென்றும், கேசாதி பாதமாகப் பாடுவது கேசாதி பாதமென்றும் பெயர்பெறும். எ - று. (உக)

ஆற்றுப்படை.

ஒன்று மகவலா லொண்புலவர் யாழ்ப்பாணர்
குன்றாத சீர்ப்பொருநர் கூத்தரே—யென்றிவரை
யாங்கொருவ னாற்றுப் படுத்த பரிசறைந்தாற்
பாங்காய வாற்றுப் படை.

எ - ன். ஆற்றுப்படை யிலக்கண முணர்த்துத னுதலிற்று.

இ - ள். ஆசிரியப்பாவாற் புலவரையானும், பாணரையானும், பொருநரையானும், கூத்தரையானும், தம்முளொருவ னாற்றுப்படுத்தால், புலவராற்றுப்படை, பாணராற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை யென்று வழக்கப்படும். எ - று.

அவை வெண்கலிப்பாவாற் பாடினு மிழுக்காது. (௩௰)

தானைமாலை, வஞ்சிமாலை, வாகைமாலை.

படைத்திறஞ் சொல்லிற் பகர்தானை வஞ்சி
யெடுத்துமேற் சேற லியம்பி—னடுத்தமைந்த
வெற்றியுரை வாகையாம் வேந்தன்பா வொன்றினு
னுற்றுரைத்து மாலைப்பே ரோது.

எ - ன். தானைமாலையும், வஞ்சிமாலையும், வாகைமாலையும் உரைத்தனுதலிற்று.

இ - ள். ஆசிரியப்பாவாற் றானையைப் புகழ்ந்துரைப்பிற் றானைமாலையாம். படைமேலெடுத்துச் சேறலைப் பாடின் வஞ்சிமாலையாம். வெற்றியைப்பாடின் வாகைமாலையாம். எ - று.

ஆசிரியப்பாவால் வருவ தெல்லாவற்றிற்கு மொக்கும். (கூக)

தாரகைமாலை, மங்கலவள்ளை.

ஓதுசந்தத் தாலுரைத்த லொண்டா ரகைமாலை
கோதிலாக் கற்பிற் குலமகளை—நீதிசேர்
மங்கல வள்ளை வகுப்பொடு வெண்பாவா
லிங்காமொன் பானென் றிசை.

எ - ன். தாரகை மாலையும் மங்கல வள்ளையு முணர்த்துத னுதலிற்று.

இ-ள். தூசிப்படையைப் புகழ்ந்து வகுப்பால் ஒன்பது கவிபாடுவது தாரகைமாலையாம். கற்புடை மகளிரைப் புகழ்ந்து ஒன்பது வகுப்பும் ஒன்பது வெண்பாவுமாப் பாடுவது மங்கலவள்ளையாம். எ-று.

அருந்ததிக் கற்பின் மகளிர்க்குள்ள இயற்கைக் குணங்களை வகுப்பாற் பாடுவது தாரகைமாலை யென்பாரு முளர். (கூஉ)

யானைவஞ்சி.

இசைந்த நிலங்குல மொத்த வெழிலோ
டசைந்த பிராயத் தளவும்—இசைந்தமதந்
துன்னவஞ்சி விடுயிர்கோன் மன்னன் றொடர்ந்தணைத்தல்
சொன்னவஞ்சி யானைத் தொழில்.

எ - ன். யானைவஞ்சி யியம்புத னுதலிற்று.

இ - ள். யானையது பிறப்புங்குலமும் ஒத்தவழகுப் பிராயமும் என்பவற்றினிலக்கண அளவும் மதந்துன்னினவிடத் தஞ்சிவிடுதலும் கொன்று திரிதலும் அது கண்டரச னணைத்தலும், வஞ்சிப்பாவாற் சொல்லப்பட்டது யானைவஞ்சியாம். எ - று. (கூரு)

மெய்க்கீர்த்தி, கையறமோதாப்பா.

தொழிலார்ந்த மெய்க்கீர்த்தி சொற்சீ ரடியா
லெழிலரசர் செய்தி யிசைப்பர்—மொழியுங்காற்
கையற மோதார் கலிவஞ்சி யென்றிவற்றாற்
பொய்தீர்ந்த நூலோர் புரிந்து.

எ - ன். மெய்க்கீர்த்தி நீர்மையுங் கையறமோதாப்பாவு முணர்த்துத னுதலிற்று.

இ - ள். ஆசிரியம் விரவிய சொற்சீரடிகளால் மன்னர துண்மைக் கீர்த்தியைத் தொடுத்துப் பாடுவது மெய்க்கீர்த்தியாம். கையறம் கலிப்பாவாலும் வஞ்சிப்பாவாலும் பாடப்படா. எ - று. (௩.௪)

புகழ்ச்சிமாலை, நாமமாலை.

புரிந்த மயக்கவடி வஞ்சியாற் பொய்தீர்
திருந்திழையார் சீர்பேர் சிறக்கத்—தெரிந்துரைத்தான்
மன்னும் புகழ்ச்சிநன் மாலையா மைந்தர்க்காம்
பின்னுமை மாலைப்பேர் பெற்று.

எ - ன். புகழ்ச்சிமாலையும், நாமமாலையு முணர்த்துத னுதலிற்று.

இ - ள். அடிமயங்கிய வஞ்சிப்பாவாற் கோற்றொடி மாதரைப் குணம் பெயரடுக்கிப் புகழ்ந்து பாடுவது புகழ்ச்சிமாலையாம்; மேற் கூறியவாறே ஆடவரைப் புகழ்ந்து பாடுவது நாம மாலையாம். எ - று.

வேறு இரட்டைமணிமாலை, வருக்கமாலை.

பெற்றசீர் மன்விருத்தம் வெண்பாப் பெயர்ந்திருபான்
மற்றை யிரட்டைமணி மாலையாம்—பொற்றொடியாய்
மன்னகவ லெட்டாய் வருக்கவெழுத் தான்வருமேல்
முன்வருக்க மாலை மொழி.

எ - ன். இரட்டைமணி மாலையும் வருக்கமாலையு முணர்த்துத னுதலிற்று.

இ - ள். ஆசிரியவிருத்தமும் நேரிசை வெண்பாவுந் தம்முண் மாறி அந்தாதியாய் இருபதுவருவது இரட்டைமணிமாலையாம். உயிர் வருக்கத்தேனும், க ச த ந ப ம வ என்னும் எழுயிர்மெய் வருக்கத் தேனும் அவ்வவ் வருக்கமுறையே யெட்டாசிரியம் வந்தால் வருக்க மாலையாம். எ - று.

யகாரஞகாரங்களை நீக்கி யேழுயிர்மெய்யென்றது பிறநூன் முடிந்தது தானுடன் படுதலென்னுந் தந்திரவுத்தி பற்றி. (௩௬)

செருக்களவஞ்சி, வரலாற்றுவஞ்சி முதலியன.

மொய்யின் றிறம்வஞ்சிப் பாவின் முடித்துரைத்தல்
செய்யிற் செருக்கள வஞ்சியாந்—தையால்
வழியுரைத்தல் வஞ்சி வரலாறு மற்று
மொழியுரைத்த றன்பெயரா மூண்டு.

எ - ன். செருக்களவஞ்சியும் வரலாற்றுவஞ்சியும் உரைத்து ஏனைவஞ்சிகளையு மாட்டெறிந் துரைத்தனுதலிற்று.

இ - ள். செருக்களச்செய்திகளை வஞ்சிப்பாவாற் பாடிற் செருக்களவஞ்சியாம். ஒரு பொருளின் வரலாற்றை வஞ்சிப்பாவாற் பாடின் வரலாற்று வஞ்சியாம். ஏனைப் பொருள்களையும் வஞ்சிப்பாவாற் பாடின் அப் பெயரானே வஞ்சியெனறு வழங்கப்படும். (௩௭)

பரணி.

மூண்ட வமர்க்களத்து மூரிக் களிறட்ட
வாண்டகை யைப்பரணி யாய்ந்துரைக்க—வீண்டிய
நேரடியே யாதியா நீண்டகலித் தாழிசை
யீரடிகொண் டாதியுட னீறு.

எ - ன். பரணியிலக்கணங் கூறுத னுதலிற்று.

இ - ள். செருக்களம்புக்குத் தனக்கூறபாடின்றி மாற்றார் யானைபடப் போர் செய்தான் பரணிக்குப் பாட்டுடைத் தலைவனும். அவனைப் பாடுமிடத்து நாற்சீர் முதலாக எனைத்துச் சீரானும் கலித் தாழிசையடித் தொகை யிரண்டின் மேலேறாமல், முதற்றொடங்கி முடிவளவும் பாடுக. எ - று.

வெண்கலிப்பாவாற் பாடினுமிழுக்காது. (௩௮)

ஈறில் வணக்கங் கடைநிலம்பே யென்பனவும்
வீறுசா லையைக்கு மெய்ப்பேய்கள்—கூறித்
திறப்படச் சொல்லினவுஞ் செப்பிற் பிறவும்
புறப்பொருணூல் கொண்டு புகல்.

எ - ன். இதுவு மது.

இ - ள். பரணி பாடுமிடத்து, முற்படக் கடவுளரை வாழ்த்தி, பின்பு கடைதிறப்புக்கூறி, பாலைநிலத்தியல்புகூறி, காளிகோட்டம் பாடி, கழுதினுண்மை பழுதறக்கூறி, காளிக்குக்கூளி சொல்லுமாறும், அவளதற்குச்சொல்லுவனவுமாகிய பிறவும் புறப்பொரு ளிலக்கணத் தின் முறைமை தோன்றச் சொல்லுக. எ - று.

பிறவுமென்றதனாற் பாட்டுடைத் தலைவனைச் சிறப்பித்தலும், அவன் படையெடுத்துச் சென்றமுறையும், செருமுடித்தலும், கூழட் டன் முதலாயினவெல்லாங் கொள்க. (௩௯)

பெருங்காப்பியம்.

புகரில் வணக்கம் பொருப்பறமே யாதி
பகர்தல் கடல்கோள் பருவ—நிகரி
றலைவனைக் கூற றபனனிந்து தோற்றஞ்
சிலைமணந்தோர் போரின் செயல். (௪௦)

செயலார் முடிசூடல் சிர்ப்புதல்வர்ப் பேறூ
டயலார் பொழில்புனல்புக் காட—லியலுமூண்
மந்திரந்தூ தாடல் வருமிகல் விக்கிரமம்
சந்துசெல வும்பிறவுஞ் சார்ந்து. (சக)

சார்சுவையே பாவம் விளக்கி யினத்தொடுபாக்
கூருரையே பாடையே கொண்டிலம்ப—நேர்சருக்க
நீப்பில் பரிச்சேத நேர்ந்துவரு மேற்பெருங்
காப்பியமா மென்று கருது.

எ - ன். பெருங்காப்பிய முணர்த்துத னுதலிற்று.

இம் மூன்று செய்யுளுக்கும் பொருள்விளங்கிக் கிடந்தமையின் பொருள் விரித்துக்கொள்க.

பொருப்பாதி: தசாங்கம். அறமாதி: அறம், பொருள், இன்பம், வீடு. பருவம்: கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில். தபனனிந்து தோற்றம்: சந்திராதித்தர் தோற்றம். ஊண்: காமபானம், வீரபானம். சுவை: சிங்காரம், பெருநகை, கருணை, வீரம், கோபம், பயம், அற்புதம், குற்சை, சாந்தம். (சஉ)

காப்பியம், புராணம்.

கருதுசில குன்றினுமக் காப்பியமா மென்பர்
பெரிதறமே யாதி பிழைத்து—வருவதுதான்
காப்பிய மாகுங் குலவரவு காரிகை
யாப்பிற் புராணமே யாம்.

எ - ன். பெருங்காப்பியத்தி னொழிபும், காப்பியமும் புராணகதையுங் கூறுதனுதலிற்று.

இ - ள். பெருங்காப்பியத்திற்கு எடுத்தோதிய அறமுதனான்கு மொழிந்தல்லா வுறுப்புக்கள் சில குறையினு மிழுக்காது. மேற்கூறிய வற்றுள் தர்மார்த்த காம மோக்ஷமெனு நான்கனுட் சில குறைந்து வந்தால், காப்பியமாம். குலவரவு முதலாயினவற்றைக் காட்டுவது புராணகதையாம். எ - று. (௪௩)

ஆய வகப்பொருண் மேலாசிரியப் பாவினுண்
மேயசீர் வஞ்சியடி மேவாது—தூய
வகப்பொருண்மே லன்றி யருங்கலிகள் வாரா
தொகப்பெறு வஞ்சி தொடர்ந்து.

எ - ன். அகப்பொருள் சொல்லும் ஆசிரியப்பாவிற் புகப்பெறு வடியும், அகப்பொருண்மேன் மிகப்பெருகிவரும்பாவும், யாதானு மொரு பொருண்மேல் வரப்பெறும்பாவு முணர்த்துதனுதலிற்று.

இ - ள். அகப்பொருள் சொல்லுமாசிரியப்பாவில் வஞ்சியடி புகுந்து விரவப்பெறு; அகப்பொருண்மேலன்றிக் கலிப்பாப் பெரும் பான்மையும் வரப்பெறு; வஞ்சி தனித்து நின்று பொருள் சொல்லுந் துணையல்லது தொகையா வரப்பெறு. எ - று. (௪௪)

தொடர்ந்த பெயர்க டொழிலளவு கால
மிடம்பொருள் பாவுறுப்போ டெல்லை—நடக்கிடையாய்ப்
பாடினோன் பாடுவித்தான் பாடப் படுபொருளா
னீடும பிறவு நிறைந்து.

எ - ன். அகலக்கவிக்குப் பெயர்வருமா றுணர்த்துத னுதலிற்று.

இ - ள். தொழிலானும், அளவானும், காலத்தானும், இடத்தானும், பொருளானும், பாவானும், உறுப்பானும், எல்லையானும், பாடினோன் பெயரானும், பாடுவித்தான் பெயரானும், பாடப்படும் பொருளானும், பிறவாற்றானும், அகலக்கவிக்குப் பெயரிடப்படும். எ - று.

அவற்றுள் யானைத்தொழிலென்னும்பெயர் தொழிலான்வந்தது. பன்னிருபடலம், நூற்றந்தாதி, குறுந்தொகை, நெடுந்தொகையென்பன அளவுபற்றி வந்தன. கார் நாற்பது முதலாயின காலம்பற்றிவந்தன. களவழியும், ஐந்திணையும் இடம்பற்றிவந்தன. அகம் புறமென்பன பொருள்பற்றிவந்தன. கலித்தொகை, வெண்பாமாலை யென்பன பாப் பற்றிவந்தன. அங்கமாலை, நயனப்பத்து, பயோதரப்பத்து என்பன உறுப்புப்பற்றி வந்தன. பாதாதிகேசம் கேசாதிபாதமென்பன எல்லைபற்றிவந்தன. தொல்காப்பியம், அவிநயம், கல்லாடமென்பன பாடினானைப் பற்றிவந்தன. பாண்டிக்கோவை முதலாயின பாடுவித்தானைப்பற்றிவந்தன. வச்சணந்திமாலையுமற்று. காந்தபுராணம் கூர்மபுராணமென்பன பாடப்படும்பொருள்பற்றிவந்தன. பிறவுமென்றதனால் இடுகுறியாற் பெயர் பெற்றனவுமுள. அவை கலைக்கோட்டுத் தண்டுமுதலியன. (சரு)

கமகன், வாதி.

நிறைமதியாற் கல்வியா னீள்கலைகள் கல்லா
தறையு மவன்கமக னாகும்--முறைமேற்கோள்
புல்லு மெடுத்துக்காட் டேது புகலுமவ
னல்வாதி யென்றே நவில்.

எ - ன். கமகனிலக்கணமும் வாதியினிலக்கணமுங் கூறுதனுதலிற்று.

இ - ள். தன்னுடைய ஞான விசேடத்தாலே யாதல், கல்விப் பெருமையாலே யாதல், ஒருவன் சொல்லிய நூல் விகற்பத்தைத் தான் பயிலாதிருந்தும் பொருள்விரிக்க வல்லான் கமகனும். எடுத்துக்கொண்ட கோளுக்குப் பொருந்தின மேற்கோளும், காரணமும், அவையிரண்டிற்கும் பொருந்தின எடுத்துக்காட்டுஞ் சொல்லி முடிப்பான் வாதியாம். எ - று.

மேற்கோள், காரணம், எடுத்துக் காட்டென்னுத அம்முறை யன்றிக் கூற்றுல் விதண்டைவாதம், சர்ப்பவாத மென்னுங் கடியத் தக்க விகற்ப வாதங்க ளுளவென வுணர்ந்து கொள்க. (சசு)

வாக்கி.

நவிலு மறமுத ஞன்குமயங் காமற்
புவியதனிற் கேட்டோர் புகழக்—கவிப்பனுவல்
குன்ருத சொல்லாற் றெளிவுபெறக் கூறுவோ
னன்ருய வாக்கியென் ருர்.

எ-ன். வாக்கியிலக்கணம் வகுத்துணர்த்துத னுதலிற்று.

இ-ள். அறம், பொருள், இன்பம், வீடென்பன தம்மில் விரவாமற் கேட்டோர் விரும்ப இலக்கணத்தையாதல், இலக்கியத்தை யாதல்,செஞ்சொல்லால் விளங்கச் சொல்லுவான் வாக்கியாம். எ-று.

புன்கவிஞர்.

ஆரொருவன் பாக்களை யாங்கொருவ னுக்களிப்போன்
சோரகவி சார்த்தொலிபிற் சொல்லுமவன்—சிரிலாப்
பிள்ளைக் கவிசிறந்த பின்மொழிக்காம் புன்மொழிக்காம்
வெள்ளைக் கவியதனின் வேறு.

எ-ன். புன்கவிஞர் நாற்பகுதியரென் றுணர்த்துதனுதலிற்று.

இ-ள். ஒருவன் பாட்டை மற்றொருவனுக்குக் கொடுப்போன் கள்ளக்கவியாம். ஒருவன் கவியிசையில் வேறொருசெய்யுட் புணர்ப்போன் சார்த்துகவியாம். தனக்கென வொன்றின்றி முன்னோர் மொழிந்த சொன்னடை பொருணடைகண்டு கவிபாடுவோன் பிள்ளைக்கவியாம். புன்மொழிகளா லொன்று கவிபாடுவோன் வெள்ளைக்கவியாம். எ-று.

இரண்டாவது செய்யுளியல் முற்றிற்று.

மூன்றாவது
பொதுவியல்.

நாற்பாச் சாதியிடம் நிறம்.

வேறுமறை யோராதி நாற்சாதி வெள்ளைமுதற்
கூறுநிலை முல்லை குறிஞ்சியே—மாறு
மருதநில் நெய்தனிறம் வான்மையே செம்மை
கருதரிய பொன்மையே கார்.

என்பது சூத்திரம்.

இவ்வியலென்ன பெயர்த்தோவெனின் முதன்மொழி யியலிற்கும், செய்யு ளியலிற்கும் பொதுவாகிய பொருளை யுணர்த்தினமையிற் பொதுவிய லென்னும் பெயர்த்து. இச் சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், முற்கூறிப்போந்த ஆசுமுதலாகிய நான்கு கவிகட்கு முதற்காரணமாயுள்ள வெண்பாமுதலிய நான்கு பாவிற்கும், சாதியும், இடமும், நிறமுமுணர்த்துத லுதலிற்று.

இ - ள். வெண்பா மறையோர் சாதி; இதற்கு நிலம்முல்லை; நிறம் வெண்மை. ஆசிரியப்பா அரசர்சாதி; இதற்கு நிலங்குறிஞ்சி; நிறஞ்செம்மை. கலிப்பா வணிகர்சாதி; இதற்கு நிலம் மருதம்; நிறம் பொன்மை. வஞ்சிப்பா சூத்திரசாதி; இதற்கு நிலம் நெய்தல்; நிறம் கருமை. எ - று. (க)

நாற்பா நாள் இராசி.

கார்த்திகை மாசிபனை குன்றாதி காட்டுகரான்
மூத்த விராசிநான் மூன்றினையும்—நீர்த்தசிர்
மேதினிமே லாசிரியம் வஞ்சிகலி வெள்ளையென
வோதியமே டாதியா லோட்டு.

எ - ன். மேற்கூறிய பாக்களின் நாளும், இராசியு முணர்த்துத னுதலிற்று.

இ - ள். கார்த்திகைமுதல் ஆயிலியமீறாகிய எழுநாளும், கர்க்கடகம், விருச்சிகம், மீனமென்னு மூன்றிராசியும், வெண்பாவிற்காம். மகமுதல் விசாகமீறாகிய எழுநாளும், மேஷம், சிங்கம், தனுசு என்னு மூன்றிராசியும், ஆசிரியப்பாவிற்காம். அனுடமுதல் அவிட்டமீறாகிய எழுநாளும், மிதுனம், துலாம், கும்பமென்னு மூன்றிராசியும், கலிப்பாவிற்காம். சதயமுதற் பரணியீறாகிய ஆறுநாளும், இடபம், கன்னி, மகரமென்னு மூன்றிராசியும்,வஞ்சிப்பாவிற்காம். எ-று.

நாற்பாத்தேவதையாதி.

ஒட்டுமதி பொன்வெள்ளை பொன்கதிரோன் சேயகவல்
காட்டியமால் காரி கலிக்காகு—மீட்டும்
புகர்பாம்பு வஞ்சிக்காம் பூவிரையோ டாடை
பகர்நிறத்தாற் கொள்கவணி பாட்டு.

எ - ன். மேற்கூறிய பாவிற்கு அதிதேவதையும், புஷ்பமும், சந்தனமும், வஸ்திரமும், ஆபரணமு முணர்த்துத னுதலிற்று.

இ - ள். வெண்பாவிற்குச் சந்திரனும், வியாழமும்; ஆசிரியப்பாவிற்கு ஆதித்தனும் செவ்வாயும்; கலிப்பாவிற்குப் புதனும், சனியும்; வஞ்சிப்பாவிற்குச் சுக்கிரனும், இராகு கேதுக்களும் அதிதேவதைகளாம். புஷ்பமும், சந்தனமும், வஸ்திரமும், ஆபரணங்களும் முன் சொன்ன நிறப்பகுதியினாலே கொள்க. எ - று. (௩)

பாடும்விதம்.

பாட்டுடையோ னூர்ப்பே ரியற்பேர் படவெதுகை
நாட்டிடினு மப்பேர் நவிலடியிற்—காட்டுமுதற்
சேர்ந்த வனுவாகச் சீர்முன் னியற்றிடினும்
வாய்ந்தசிறப் பென்கை வழக்கு.

எ - ன். பாடும்வித முணர்த்துத னுதலிற்று.

இ - ள். பாட்டுடைத்தலைவன் ஊர்ப்பெயரினையாயினும், இயற்பெயரினை யாயினும் அடிமுற்சீரிலே நிறுத்தி எதுகைத் தொடர்படவைப்பினும் வருக்கமுதலிய அனுவெதுகைத் தொடர்பட வைப்பினும் சிறப்பாம். எ-று. (சு)

உறுப்புச்செய்யுள்.

வழக்குண் மரபிய லு ணோர்ந்து வழுவா
திழுக்கி வடவெழுத்தை யின்பம்—வழுக்காது
முன்னையோர் பாட்டிற் பயின்ற மொழியன்றே
சொன்ன வுறுப்பின் றுணிபு.

எ - ன். உறுப்புச்செய்யு ணெறியுணர்த்துத னுதலிற்று.

இ - ள். வழக்கினோடும், மரபியலோடும் பொருத்தமுடையவாய், வடவெழுத்துக்கலவாது, கேட்டோர்க்கு மிகவு மின்பம் பூரிக்குஞ் சொல்லாகச் சான்றோர் செய்யுட்களில் எடுத்துக் காட்டுஞ் சொற்களாற் புணர்க்கப்படுவன உறுப்புச்செய்யுளாம். எ - று. (ரு)

துணிதற் கரிது பொருளென்றுஞ் சோர்வு
பணிவுற்ற சொன்மேற் பகுத்து—மணிபொருட்டான்
மற்றமுன் டென்று முரைப்போர் வழுச்சொல்லி
னிற்றன்றே பாவி னிழுக்கு.

எ - ன். குற்றம்படாமற் பாக்களைப் புணர்க்கென் றுணர்த்த னுதலிற்று.

இ - ள். நிச்சயித்தற்கரிய பொருளுடையவாயினும், எடுத்தேறுபட்ட சொல்லுடைய வாயினும், பல பொருளுக்கேற்ற சொல்லுடைய வாயினும் பொருந்திற் குற்றமாம். எ - று.

எடுத்தேறுசொல் - இடிபோன்ற சொல். (சு)

அகலக்கவிபுகல்வோர்.

இழுக்கிலா நாற்குலத்தோ ரெப்பொருளுந் தேர்ந்தோ
ரொழுக்கறந் தெய்வ முடையோர்—விழுக்கவிக
ளீரிரண்டு முத்தமிழும் வல்லோரே யெஞ்ஞான்றுஞ்
சீரார் கவியுரைப்போர் சென்று.

சென்றவிரு பான்றொடங்கிச் சேருமெழு பானளவு
நின்றபரு வத்துறுப்பு நீங்காதோ—ரொன்றி
லகலாப் பிணியில்லோ ரன்றோபாக் கொண்டு
புகலப் பெறுவார் புகழ்ந்து.

எ-ன். அகலக்கவி புகல்வோ ரிவரென் றுணர்த்துத னுதலிற்று.

இவ்விரு செய்யுளையும் விரித்துரைத்துக் கொள்க.

இக் குணமில்லாதார் பாடலாகா தென்பதாம். (௯)

நல்லவை.

புகழுந் தருமநெறி நின்றோர்பொய் காம
மிகழுஞ் சினஞ்செற்ற மில்லோர்—நிகழ்கலைக
ளெல்லா முணர்ந்தோ ரிருந்த விடமன்றோ
நல்லா யவைக்கு நலம்.

எ-ன், அகலக்கவி கேட்பிக்கு நல்லவை, நிறையவையென்று மிரண்டனுள், நல்லவை கூறுத னுதலிற்று.

இ-ள். இவ்விலக்கண முடையோர் அவை நல்லவையாம். எ-று.

நிறையவை.

நலனடக்கஞ் செம்மை நடுவுநிலை ஞானங்
குலனென் றிவையுடையோர் கோதில்—புலனில்லோர்
சென்று மொழிந்தனவுங் கேட்போர் செறிந்தவிட
மன்றோ நிறைந்த வவை.

எ - ன். நிறையவை கூறுதனுதலிற்று.

இ - ள் இவ்விலக்கணமுடையோர் அவை நிறைவையாம். எ - று.

அவை யுடையோரும் குலனுடையோராதல் சிறப்பு. (௧0)

தீயவவை.

அவையின் றிறமறியா ராய்ந்தமர்ந்து சொல்லார்
நவையின்றித் தாமுரையார் நாணார்—சுவையுணரா
ராய கலைதெரியா ரஞ்சா ரவரன்றே
தீய வவையோர் செருக்கு.

எ - ன். தீயவவை யுணர்த்துத னுதலிற்று.

இ - ள். இவ்விலக்கணத்தையுடையோர் அவை தீயவவையாம். எ - று.

இவர்முன் கவிகேட்பிக்க லாகாதென்பதாம். (௧௨)

அந்தணரியல்பு.

குன்றுநூ லங்கைமறை கோவணங்கோன் முத்தீயு
நன்றாய வேள்வி நகரினமு—மன்றிக்
குடைசமிதை குண்டிகைபுற் கோத்திரமென் றின்ன
வுடையாரை யந்தணரென் றுன். (௧௨)

உன்ன லரன்கழலை யோங்கியசீ ரங்கியய
னென்னவுவ மித்த லிவரென்றே—நன்மறைக
ளோதலே யோதுவித்தல் வேட்டலே வேட்பித்த
லீத லிரத்தலென் றேத்து.

எ - ன். நாற்குல மென்றவற்றுள் அந்தணரியல்பு கூறுத னுதலிற்று.

இ - ள். இவ்விலக்கணமுடையோர் அந்தணராம். எ - று. (௧௩)

மன்னரியல்பு.

ஏத்திய பூவைநிலை யெல்லோன் கழல்வாழ்த்தல்
காத்தன்முடி சூட்டல் களம்வேட்ட — றீத்தொழில்கள்
வெண்குடைசெங் கோல்கவரி வெற்றியரி யாசனமு
மண்குவவு மன்னர் வளம். (௧௪)

வளர்த்தல் குடிகமையஞ் சாதுரங்கம் வாய்மை
விளைத்தல் பொருமுனைறியா மெய்ந்நூ — லளத்தலே
யும்ப ருவமை யுரைகோ ளிவையுடையா
ரிம்ப ருலகுக் கிறை.

எ - ன். மன்னரியல் புணர்த்துத னுதலிற்று.

இ - ள். இப்பெற்றி யுடையோர் மன்னர். எ - று. (௧௫)

பூவைசியரியல்பு.

இறையஞ்சா தேருழல்வித் தீதல் புரிந்து
மறைகொண் டழல்வளர்த்து வாய்மை — பொறையுடைமை
யென்றிவையுங் காத்து நிரையோம்ப லென்பவே
குன்று வணிகர் குணம்.

எ - ன். பூவைசியர் தனவைசியர் என்பவர்களுட் பூவைசியரியல்பு கூறுத னுதலிற்று.

இ - ள். இப்பெற்றியுடையார் பூவைசியராம். எ - று. (௧௬)

தனவைசிய ரியல்பு.

குணங்கோடாக் காத்தல் கொழுநிதிக்கோன் றன்னே
வணங்க லவன்புகழே வாழ்த்த—லணங்கா
ரிடத்தேகி வாணிகத்தா லீட்டலெரி வேட்டல்
படைத்தோர் வணிகரென் பார்.

எ - ன். தனவைசியர் செய்தி கூறுத னுதலிற்று.

இ - ள். இப்பெற்றியுடையோர் தனவைசியராம். எ-று. (கஎ)

சூத்திரரியல்பு.

பார்திகழு மூவர் பணித்த பணியொழுக
லேருழுத லீதல் பிழையாமை—பார்புகழக்
கோட்ட மிலாமை யொருமைக் குணம்பிறவுங்
காட்டினர் சூத்திரர்தங் கண்.

எ - ன். சூத்திரர் செய்தி கூறுத னுதலிற்று.

இ - ள். இப்பெற்றியுடையோர் சூத்திரராம். எ - று. (கஅ)

சிறப்புப்பாயிர விலக்கணம்.

கன்னுய தெய்வ மிறைஞ்சிக் கருது நூல்
பன்னா வதிகாரம் பாரித்த—லென்னு
மதியோர் சிறப்பென்பர் வானவரை வாழ்த்தா
வதிகார முஞ்சிறப்பென் றூக்கு.

எ - ன். அகலக்கவிக்கு இன்றியமையாத பாயிரங்களுள், சிறப்புப் பாயிரங் கூறும்வகை யுணர்த்துத னுதலிற்று.

இ - ள். தெய்வவணக்கமும், அதிகாரமும் புணர்த்துரைப்பதும், அதிகாரமொன்றுமே யுரைப்பதுஞ் சிறப்புப்பாயிரமாம். எ-று.

ஆக்கியோன் பேர்வழி யேயெல்லை யாப்பந்நூற்
போக்கிடஞ்சொல் வோர்நுதலிற் றூயபயன்—தாக்கியவிவ்
வெட்டினெடுங் காலங் களங்கா ரணமியம்பப்
பட்டாலு மப்பெயரே பன்னு.

எ - ன். இதுவுமது.

இ - ள். ஆக்கியோன் பெயர்முதல் பயனீறாகிய எட்டு முறைப் பதும்,இவற்றுடன் காலம் களன் காரணம் என்னு மூன்றுங் கூட்டி யுரைப்பதுஞ் சிறப்புப்பாயிரமாம். எ - று. (உ0)

பன்னிய நூற்பேர் பகர்ந்தோன்பேர் காரணமுந்
துன்னும் பயனளவுஞ் சொல்லினும்—முன்னைச்
சிறப்பா மவற்றுட் சிலவேறி னாலும்
பெறப்படுமோ முன்னைப் பெயர்.

எ - ன். இதுவுமது.

இ - ள். இவ்வைந்துங் கூறுவதும் இவற்றுடன் முன்னை யவற் றுட் சிலவேறக் கூறுவதும் அச் சிறப்புப் பாயிரமே யாம். எ-று. (உக)

போதுப்பாயிரத் திலக்கணம்.

பெயரார்நா லீவோ னியல்பீயும் பெற்றி
யயராது கொள்வோ னளவு—மயர்வின்றிக்
கோடன்மர பீரிரண்டுங் கூறல்பொதுப் பாயிரமாம்
பாடல்சா னூலின் பயன். (உஉ)

பயனன்காய் மூவகைத்தாய் பன்மூன் றுரைத்தா
யியலுடைத்தாய் மூவாம லேழு—செயன்மதத்தாய்ப்
பத்தாய்க் குணக்குற்றம் பத்தொழிந் தெண்ணான்கா
முத்தியது நூலென் றுரை. (உங)

உரைத்தநதி சியமோ டொண்பருந்து தேரை
நிரைத்ததொழிற் சூத்திரத்தி னின்று—விரைக்குழலாய்
செம்பொருண் ஞாபகமாஞ் செய்தி நியதியாங்
கம்பமிலா நூலின் கருத்து. (உச)

கருத்தெச்ச நுட்பம் பொழிப்பகலங் காட்டி
யுரைத்த வுதாரணமு முண்டேல்—விருத்தியாம்
பூண்ட கருத்தும் பொழிப்பு முதாரணமுங்
காண்டிகையென் றோதல் கடன். (உரு)

எ - ன். பொதுப்பாயிர விலக்கணங் கூறுதனுதலிற்று.

இச் சூத்திரங்களை விரித்துரைத்துக்கொள்க.

அகலக்கவி கேட்பிக்கும் முகூர்த்தம்.

கடனு மகரவா காரங் கதிரோ
னுடனு யெழுங்கடிகை யோரா—றிடனுகி
யேனை யுயிர்க்கூறு மிவ்வகையால் வந்துதித்தா
லானமுதன் மூன்று மழகு.

எ-ன். அகலக்கவி கேட்பிக்கும் முகூர்த்த முணர்த்துத னுதலிற்று.

இ - ள். அகர ஆகாரமும், இகர ஈகார ஐகாரமும், உகர ஊகார ஔகாரமும், எகர ஏகாரமும், ஒகர ஓகாரமும், முறையே உதயாதி அவ்வாறு நாழிகை யுதிக்கும். இவற்றுள், முதன்மூன்று நாழிகையும் உத்தமம்; பின்மூன்று நாழிகையுமாகா. எ - று.

இவ்வைந்து கூற்றெழுத்துக்களை முதலிலுடைய பாக்களுக்குச் சொன்னகாலத்தில் முற்கூற்றி லரங்கேற்றுக வென்பதாம். (உசு)

அழகாக முன்மொழிக்க ணாராய்ந் தவை
மழகாகச் சொல்லினவு மன்றி—யழகாகச்
செய்யுட் குரைத்தனவு மெல்லாஞ் செயிர்தீரச்
செய்யினன் றன்றாயிற் றீது. (உஎ)

தீதிலா நூலுரைத்த தீதிலாச் செய்யுளைத்
தீதிலோர் நல்லவையிற் சேர்த்ததற்பி—னாதிசால்
பாவிற் கியைப வுரைக்கிற் பலபொருளுந்
தாவில் பொருளோடுஞ் சார்ந்து. (உஅ)

சார்ந்தின் மெழுகித் தரளத் திரள்பரப்பிக்
காந்தி மணிகனகங் கண்ணுறீஇ—வாய்ந்தலர்ந்த
தாமமு நாற்றி விளக்கிட்டுச் சாறவிசி
னாமகளை யேற்றுவித்த னன்கு. (உகூ)

நன்குணர்ந்தோ ராய்ந்த தமிழ்நூலி னன்னெறியை
முன்புணர்ந்து பாட்டியனூன் முற்றுணர்ந்து—பின்புணரு
நல்லார்முன் னல்லாய் நலமார் கவியுரைக்க
வல்லாத லன்றோ மதி. (௩௰)

மூன்றாவது பொதுவியல் முற்றிற்று.

அவையடக்கம்.

எண்களங்கம் யாவையு நீக்கி யினிதருளி
நண்களந்தை நூலோடு நாட்டுவரா—றெண்களந்தை
மன்பெயரான் வண்புகழான் வச்சணந்தி மாமுனிவன்
தன்பெயரா னாட்டுந் தமிழ்.

வெண்பாப்பாட்டியல் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

வரையறுத்தபாட்டியல்

மூலமும் உரையும்.

கட்டளைக்கலித்துறை.

பார்கொண்ட சோதியன் சம்பந்த மாமுனி பாதமலர்
நேர்கொண் டிறைஞ்சி நிகழ்த்துகின் றேனெடு நூல்சுருக்கி
யேர்கொண்ட சொற்புல வோர்செய்த பாட்டியல் கற்கமிக்க
சீர்கொண்ட மாமதி யில்லா தவர்க்குத் தெரிவுறவே. (க)

தெரியாது வந்த வழியடை யாளஞ் சிலர்தமக்கு, மரி யாதை யின்றென் மதியின்மை யாற்சொன் மழலைப்புன் சொல், பெரியார் பொறுப்பர்தம் பேரறி வாண்மையும் பேதைமைபோய், விரியாத வென்னறி வின்மையும் பாரில் விளங்குதற்கே. (உ)

விளக்கிய மங்கல மேமுத லாக விரித்தபத்துந், துளக் கற நாடும் பொருத்தமன் றேயெல்லை சொல்லறியா, வுளக் கவி வாண ரெனைப்போல நாடொறு முண்பொருட்டால், வள க்கவி பாடிப் பிழைப்பதிந் நூலின் வரும்பயனே. (௩)

சீர், எழுத்து.

வருகின்ற மங்கலச் சொல்லினுட் சீர்கொள்க வாய்ந் தகக்கா, வருகொன்று கிக்கிசொச் சோக்கள்நந் நாவொ டடுத்த நிந்நீ, தருகின்ற யாவொடு வவ்வாவிவ் விப்பெயர் தங்களுக்கு, முருகொன் றெழுத்து நந் நூயூப் பெயர்க்கு மொழியநன்றே.

எ - ன். சீர், எழுத்து என்னு மிரண்டு மங்கலச் சொல்லிற்குப் பொருந்திய பெயர்களை யுணர்த்துத னுதலிற்று.

இ - ள். க, கா, கி, கீ, சொ, சோ, ந, நா, நி, நீ, யா, வ, வா, வி, வீ என்னும் எழுத்துக்களை முதலாகவுடைய பெயர்களுக்குச் சீரென்னு மங்கலச் சொல்லால் சீர்கொண்ட, சீர்தந்த, சீரேறு எனவும்; நு, நூ, யூ என்னு மெழுத்துக்களை முதலாகவுடைய பெயர்களுக்கு எழுத்தென்னு மங்கலச்சொல்லால் எழுதரிய எனவும் பாவிற் கியைந்தபடி பாடுக. எ - று. (ச)

போன், பூ.

மொழிபொன்குக் கூவுஞ்சௌ சாரந்துத் தூவு முரணி
தெத்தே, யழிவில்நெந் நேயொடு புப்பூமெம் மேயொ டகன்ற
மொம்மோ, வழுவின்மௌ காரப் பெயர்க்குரை பூக்கொண்
டிசைக்ககௌசை, வழிகொண்மம் மாமிம்மீ மும்மூவை கார
வௌ காரங்கட்கே.

எ - ன். பொன், பூவென்னு மிரண்டு மங்கலச் சொல்லிற்குப் பொருந்திய பெயர்களை யுணர்த்துதனுதலிற்று.

இ - ள். கு, கூ, சௌ, து, தூ, தெ, தே, நெ, நே, பு, பூ, மெ, மே, மொ, மோ, மௌ என்னு மெழுத்துக்களை முதலாகவுடைய பெயர்களுக்குப் பொன்னென்னும் மங்கலச் சொல்லால் பொன்னும், பொன்கொண்ட, பொன்பயில், பொன்வளர், பொன்கிளர் எனவும்; கௌ, சை, ம, மா, மி, மீ, மு, மூ, வை, வௌ என்னு மெழுத்துக்களை முதலாகவுடைய பெயர்களுக்குப் பூவென்னு மங்கலச்சொல்லால் பூக்கொண்டு, பூமேவு, பூவணி எனவும் பாவிற்கியைந்தபடி பாடுக. எ - று. (ரு)

திரு திங்கள், மணி, நீர்.

வெள்வுந் திருத்திங்க ளென்சொற்கள் கொக்கோ வரும்
பெயர்க்காஞ், செவ்வுண் மணிச்சொற்கெக் கேப்பெயர்க்காஞ்
செழு நீர்ச்சொற்கையோ, டிவ்வுண்சிச் சியொடு தித்தீத்தைத்
தொங்நோ வுடனிசையக், கௌவும்பை காரப் பெயர்க்குநன்
றும்படி கட்டுரையே.

எ - ன். திரு, திங்கள், மணி, நீர் என்னு நான்கு மங்கலச்
சொல்விற்குப் பொருந்திய பெயர்களை யுணர்த்துதனுதலிற்று.

இ - ள். கொ, கோ என்னு மெழுத்துக்களை முதலாகவுடைய
பெயர்களுக்குத் திருவென்னு மங்கலச்சொல்லால் திருமகள், திரு
வளர், திருப்பதி, திருமல்கு, திருமன்னு எனவும், திங்க ளென்னு
மங்கலச்சொல்லால் திங்களூர், திங்களால் எனவும்; கெ, கே என்னு
மெழுத்துக்களை முதலாகவுடைய பெயர்களுக்கு மணியென்னு மங்
கலச்சொல்லால் மணிவளர், மணிதிகழ், மணிமேவு, மணிமன்னு,
மணிதங்கு எனவும்; கை, சி, சீ, தி, தீ, தை, தொ, தோ, பை என்னு
மெழுத்துக்களை முதலாகவுடைய பெயர்களுக்கு நீர் என்னு மங்கலச்
சொல்லால் நீர்கொண்ட, நீர்மேவு, நீர்கிளர் எனவும் பாவிற்கியைந்த
படி பாடுக. எ - று. (௬)

சோல், கங்கை, வாரணம்.

கட்டுரை சொற்கொள்ள காரஞ்சுச் சூக்கள்செச் சேக்
கள்தெளநௌ, , ஒட்டுரை போர்க்கினி தாங்கங்கை அஆஓ
ஒக்கள்தத்தா, விட்டுரை தொத்தோ விழையோப் பெயர்க்கு
யர் யானையினபேர்ப் பட்டுரை வாரணங் கொண்டுஞெஞ்
ஞொப்பெயர் பாடுகவே.

எ - ன். சொல், கங்கை, வாரணம் என்னு மூன்று மங்கலச் சொல்லிற்குப் பொருந்திய பெயர்களை யுணர்த்துதனுதலிற்று.

இ - ள். ஔ, சு, சூ, செ, சே, தௌ, நௌ என்னுமெழுத்துக்களை முதலாகவுடைய பெயர்களுக்கு சொல்லென்னு மங்கலச்சொல்லால் சொற்கொண்ட எனவும்; அ, ஆ, ஒ, ஓ, த, தா, தொ, தோ, யோ என்னு மெழுத்துக்களை முதலாகவுடைய பெயர்களுக்குச் கங்கையென்னு மங்கலச்சொல்லால் கங்கைசூழ், கங்கைநீர், கங்கைசேர் எனவும்; ஞெ, ஞொ என்னுமெழுத்துக்களை முதலாகவுடைய பெயர்களுக்கு வாரணமென்னு மங்கலச் சொல்லால் வாரணஞ்சூழ் எனவும் பாவிற்குப் பொருந்தியவாறு பாடுக. எ - று.

கங்கையென்னு மங்கலச்சொல்லுக்குப் பரியாயமாகக் கடல் காரென்னு மங்கலச் சொற்களைக்கொண்டு கடல்செறி, கடல்வளை எனவும், கார்கொண்ட, காரேறு எனவும் பாடினு மிழுக்காது. (எ)

குஞ்சரம், உலகு, பார்.

பாடுயர் குஞ்சரம் இஈயு ஞாவும் பகர்பெயர்க்காம், நீடுல கங்கொடு பப்பாப் பெயர்க்கு நிரந்துரைக்க, பீடுறு பார் கொடு சச்சாப்பெப் பேயொ டொளிர்ந்தபொப்போ, நாடு வெவ் வேமுத னண்ணிய பேர்க்கு நயந்துரையே.

எ - ன். குஞ்சரம், உலகு, பார் என்னு மூன்று மங்கலச்சொல் லிற்குப் பொருந்திய பெயர்களை யுணர்த்துதனுதலிற்று.

இ - ள். இ, ஈ, ஞா என்னு மெழுத்துக்களை முதலாகவுடைய பெயர்களுக்குக்குஞ்சரமென்னு மங்கலச் சொல்லால் குஞ்சரஞ்செறி, குஞ்சரம்பின், குஞ்சரம்பொலி எனவும்; ப, பா என்னும் எழுத்துக்களை முதலாகவுடைய பெயர்களுக்கு உலகென்னு மங்கலச்சொல் லால் உலகெலாம் எனவும்; ச, சா, பெ, பே, பொ, போ, வெ, வே

என்னு மெழுத்துக்களை முதலாகவுடைய பெயர்களுக்குப் பாரென்னு மங்கலச் சொல்லால் பார்சொண்ட, பார்மேவு எனவும் பாவிற்குப் பொருந்தியவாறு பாடுக. எ - று. (அ)

தேர்.

உரைதரு தேர்கொடு உஊஎ ஏஐ யுவந்தநைமை
விரைதரு பேர்கட்கு நேரே விளம்புக மேவுதண்ணீர்த்
திரைதரு வேலை யுடனேசெஞ் சேலையுஞ் சேரவென்று
வரைதரு மஞ்சனந் தோய்ந்தரி சிந்திய வாள்விழியே.

எ - ன். தேரென்னு மங்கலச் சொல்லிற்குப் பொருந்திய பெயர்களை யுணர்த்துதனுதலிற்று.

இ - ள். உ, ஊ, எ, ஏ, ஐ, நை, மை என்னு மெழுத்துக்களை முதலாகவுடைய பெயர்களுக்குத் தேரென்னு மங்கலச் சொல்லால், பாவிற்குப் பொருந்தியவாறு பாடுக. எ - று.

மேவுதண்ணீர்—வாள்விழியே என்பது மகடூஉ முன்னிலை. ()

வாளா வுரைப்பிற்றென் னூலோர் வகுத்த வருணமுண்டு
கேளார்ந்த நல்ல கதிகண மாய்ந்துரை கேழ்கிளரத்
தாளார் கமலமு நீலமும் போன்று தருக்கிமுட்டி
நீளா மதர்த்தரி சிந்திய வாட்க ணிரைவளையே.

எ - ன். இந் நூலினெழிபு கூறுகின்றது.

இச் செய்யுளுக்குப் பொருள் விளங்கிக்கிடந்தமையின் விரித்துரைத்துக்கொள்க. (௬௦)

வரையறுத்த பாட்டியல் முற்றிற்று.